

# பலிக்களம்

# பலிக்களம்

நீ. மரியசேவியர்

திருமறைக்கலாமன்ற வெளியீடு
கனடா

# அணிந்துரை

பலிக்களம் இயேசுவின் பாடுகளையும், மரணத்தையும் சித்தரிக்கும் ஒரு காவியம். மனித குலத்தின் அழிவைத் தவிர்க்கத் தன்னுயிரைக் கொடுத்த மீட்புச் செய்தியை உலகிற்களித்த அன்பரசனின் உண்மை வரலாற்றின் உன்னதப் படைப்பு.

உலகெங்கும் வன்முறையில் சிக்கித் தத்தளிக்கும் மக்களுக்கு நம்பிக்கையின் சுடரைப் பிரகாசிக்கச் செய்வதே **பலிக்களத்**தின் முக்கிய நோக்கமாக அமைகின்றது. குறிப்பாக, ஈழ மண்ணில் நலிந்து, மெலிந்து, துன்புற்று, துயருறும் மக்களுக்கு பலிக்களம் மூலம் கொடுக்கப்படும் கிறிஸ்துவின் செய்தி, விடுதலையின் நம்பிக்கை ஒளியாக திகழ்கின்றது.

கடந்த முப்பது ஆண்டுகளுக்கு மேலாக மேடையேறும், **பலிக்களம்** யாழ்ப்பாணத்தில் தயாரிக்கப்பட்ட முதலாவது ஒளிப்பதிவு நாடாவாக வெளியிடப்பட்டதுடன், சிறு நூல்வடிவிலும் இரு முறை அச்சேற்றப்பட்டது. கனடா வாழ் தமிழ் மக்களுக்கும் பயன்படும் என்ற நம்பிக்கையில் **பலிக்களம்** முதன் முறையாகக் கனடா மண்ணில் மேடையேறும் இவ்வேளை மூன்றாவது தடவையாக அதை அச்சேற்றுவதில் பெருமையடைகிறோம்.

**ம. ஆ. யேசுதாசன்**
**சட்டவல்லுனரும் சட்ட அறிஞரும்**
**தலைவர்**
**திருமறைக்கலாமன்றம்**
**கனடா.**

**தைத்திங்கள் 1993**
**யாழ்ப்பாணம்**

இருபது ஆண்டுகளுக்கு முன் இறைமகன் இயேசுவின் திருப்பாடுகளைச் சித்தரிக்கும் **பலிக்களம்** என்னும் பக்தி இசை – உரை – நாடகம் முதல் முறையாக யாழ்ப்பாணத்தில் அரங்கேறியது. அதே ஆண்டு இந் நாடக நூல் தன் முதற்பதிப்பைக் கண்டது, இவ்வாண்டு அது மீண்டும் அச்சேற வேண்டிய நிலை உருவாகியுள்ளது.
**பலிக்களம்**, இடைப்பட்ட காலத்தில் நாட்டின் பல இடங்களிலும், பல காலங்களிலும், பல சூழ்நிலைகள் மத்தியிலும் மேடையேற்றப்பட்டது. அத்துடன் யாழ்ப்பாணத்தில் தயாரிக்கப்பட்ட முதற் தொலைக்காட்சி (சிறு திரை)ப் படமும் அதுவாகும் பெருமையையும் சேர்த்துக் கொண்டது. இவ்வாண்டு கிறிஸ்தவ நோன்பு காலத்தில் அது யாழ்ப்பாணத்தில் மட்டுமன்றி கொழும்பு, ரொறன்ரோ(கனடா), பரீஸ்(பிரான்ஸ்) போன்ற நகரங்களிலும் மேடையேறுகிறது. இப்பெருமிதத்தில் இறை அருளை நன்றியுடன் நினைக்கும் திருமறைக்கலாமன்றம், கலை வழி இறை பணிபுரிய அன்புக்கரம் நீட்டி அனைவரையும் அழைக்கின்றது.

**பேராசிரியர் நீ. மரியசேவியர் அடிகள்**
**இயக்குநர்**
**திருமறைக்கலா மன்றம்.**

# வணக்கம்

**க**ன்னியின் உதரத்தில் கருவானார். பவம் படிந்த பாருலகில் உருவானார் இறைமகன் இயேசுக்கிறீஸ்து என்ற பெயருடன் பலிப் பொருளானார்.

அன்பின் துடிப்பில், அருளின் பிடிப்பில், அயராது உழைத்த அமலன் கிறீஸ்துவின் இறுதி நாட்கள் . . . கல்வாரி என்ற பலிக்களம் நோக்கிச் செம்மறிப் புருவை ஏகுகிறது . . . கடவுளின் திருமகன் கல்நெஞ்சம் படைத்த மனிதராகிய நமக்காய்க் கடின பாடுகள் பட்ட –
கண்ணீருடன் கலந்த காவியச் சரித்திரத்தைத் தொகுத்து, கரங் கூப்பிப் பக்தியுடன் மேடை ஏற்றுகிறோம்.

**நீ. மரியசேவியர்**
**திருமறைக் கால மன்றம்**
**01.03.1973**

**மானிப்பாய்**
**13-03-1973**

# அணிந்துரை

நீ. மரியசேவியர் அடிகளார் அவர்களின் நாடக அனுபவங்களையும் அவரால் இயற்றி நாடத்தப்பெற்ற நாடகங்களையும் நான் நன்கு அறிவேன். நாடகக் கலையை நன்கு ஆராய்ந்தறிந்து இரசிகர்களின் உள்ளங்களில் பதியக் கூடியவாறு புனிதமான புதிய முறைகளைப் புகுத்தி - நடாத்திக் காண்பித்து வருகின்றார். "**பலிக்களம்**" என்ற சமய சம்பந்தமான நாடகத்தின் போக்கு எவ்வாறு அமைந்திருக்கும் என்பதை நான் சொல்ல வேண்டிய அவசியம் இல்லை.

இயேசுபெருமான் உலகில் தோன்றி மக்களின் நலனுக்காக பல கஷ்டங்களை அனுபவித்து தன்னுயிரைப் பலிகொடுத்த விஷயத்தை விபரித்துக் காட்டுவதே இந் நாடகத்தின் நோக்கம். சமய விஷயங்களைக் காட்டுவது மாத்திரமன்றி நாடகக் கலையை விருத்தி செய்வதில் அடிகளார் ஆற்றிவரும் தொண்டு மிகவும் பாராட்டத்தக்கது. இவர் போன்றவர்களின் ஆர்வத்தாலும் - ஆற்றலாலும் தமிழ் நாடகக் கலை உன்னத நிலையை அடையுமென எதிர்பார்த்து வருகின்றேன்.

**இப்படிக்கு**
**கலையரசு. க. சொர்ணலிங்கம்.**

# இவர்களைத் தெரிந்து கொள்ளுங்கள்.........

**கைப்பாஸ்:** இயேசுவின் இறுதிநாட்களில் யூதரின் பெரிய குருவாக விளங்கியவர். இயேசுவின் கொலைக்கு முக்கிய காரணமானவர்.

**அன்னாஸ்:** பெரிய குருவாகிய கைப்பாசின் மாமனார். இவரும் இயேசுவைக் கொல்லவேண்டுமென யூதரின் ஆலோசனைச் சங்கத்திற்கு அறிவுரை வழங்கியவர்களுள் ஒருவர்.

**பரிசேயர்:** மோயீசனின் சட்டத்தை நுணுக்கமாகக் கடைப்பிடிப்பதிற் கண்ணும் கருத்துமாயிருந்தனர். ஆனால், இவர்கள் மக்களின் மதிப்பைப் பெறுவதற்காகவே இவ்வாறு நடந்து கொண்டதால் இவர்களை வெளிவேடக்காரர் என இயேசு கண்டித்தார். அதனால் இவர்கள் இயேசுவை ஒழித்துவிடச் சதிசெய்தனர்.

**சதுசேயர்:** உயர்குடிமக்கள். தங்கள் உயர்நிலையைக்காக்கும் பொருட்டு அன்னிய அரசுடன் ஒத்துழைத்தனர். இயேசு தங்கள் செல்வாக்கிற்கு எதிரிடையாக இருக்கக்கூடும் என அஞ்சி அவரைத் தொலைத்து விடுவதில் முக்கிய பங்கு எடுத்தனர்.

**தலைவன்:** இயேசுவைக் கொலைசெய்யும் சதித்திட்டத்திற்கு உச்சக்குரல் கொடுப்பவன். இயேசுவைக் கொல்லும் செயலில் தீவிரவாதி.

**இராயப்பர்:** இயேசு தேர்ந்தெடுத்த பன்னிருவருள் ஒருவர். இயேசுவை மும்முறை மறுதலித்தவர். ஆனால் தன் குற்றத்திற்காக மனங் கசிந்தழுது மன்னிப்புப் பெற்றவர். பின் இயேசுவால் திருச்சபையின் தலைவராக நியமிக்கப்பட்டவர்.

**அருளப்பர்:** பன்னிருவருள் ஒருவர். இயேசுவின் தனிப்பட்ட அன்புக்குரியவர். கடைசி இரவுணவின் போது இயேசுவின் மார்பில் சாய்ந்திருந்தவர். அவருடைய பாடுகளின் போது இறுதிவரையும் இயேசுவைப் பிரியாது கூட இருந்தவர்.

**இயாகப்பர்:** பன்னிருவருள் ஒருவர். இயேசுவின் நெருங்கிய உறவினர்.

**யூதாஸ்:** பன்னிருவருள் ஒருவன். பணப் பைக்குப் பொறுப்பாளி. பணப்பற்றின் காரணமாக முப்பது வெள்ளிக் காசுக்குத் தன்குருவைக் காட்டிக்கொடுத்தவன்.

**பிலாத்து:** உரோமைப்பேரரசின் பிரதிநிதியாக யூதேயாவை ஆட்சிசெய்தவன். இயேசு குற்றமற்றவர் என்பதை நன்குணர்ந்தும், பதவிப்பற்றின் காரணமாக அவரைக் கொலைக்குத் தீர்ப்பிட்டவன்.

**அரிமத்திய சூசை:** இயேசுவின் சீடனாக விளங்கிய ஒரு செல்வந்தர். இயேசு இறந்தபொழுது அவரைச் சிலுவையில் இருந்து இறக்கித் தனது புதிய கல்லறையில் நல்லடக்கம் செய்தவர்.

**நிக்கோதேமு:** இயேசுவின் அந்தரங்கச் சீடன். யூதரின் தலைமைச் சங்க உறுப்பினர். இசேவைக் கொல்ல அவர்கள் திட்டம் தீட்டிய போது இயேசுவிற்காகப் பரிந்து பேசியவர்.

**மரியாள்:** இயேசுவின் தாய்.

**இயேசு:** மன்னுயிர் மீட்கத் தன்னுயிர் ஈந்த இறைமகன்.

**சுவாமி இ. மரியவளன்**

# முன்மொழி



பழையன மறைந்து புதியவை மலருமிடம்
**பலிக்களம்**

வேதனை உறைந்து சாதனை நிறையும் இடம்
**பலிக்களம்**

தாழ்வு மடிந்து வாழ்வு விடியும் இடம்
**பலிக்களம்**

நெல்லின் மணி ஒன்று மண்ணில் விழுந்து அழிந்து பல்வேறு கதிர்
விளையும் பரந்த வயல் நிலம் ஒரு
**பலிக்களம்**

***மண்ணிலே மடிந்த மணி, நெற்கதிராய் நிமிர்வதற்கு நிலையான பலிக்களமே வயல் நிலம்***

**உரை:** தாயிற் கருவுற்று சேயாய் உதிப்பதற்குத் தாயின் உதரம் ஒரு **பலிக்களம்**

கண்ணின் கருமணியாம் காதற் குழந்தை ஒன்று கருவுற்று உருவாகும் கற்பகச்சோலை என்ற பாசப் **பலிக்களமே** தாய் உதரம்.

**உரை:** இறைவன் நிறை அன்பை
அளக்குந்தாள் இல்லாத அமலன் உயர் அன்பை
அகிலத்தில் உள்ளோர்க்கு அறிவித்து
அருளுமிடம்
கல்வாரி மலையென்ற **பலிக்களம்**

பாடல் **அன்பிற்கும் உண்டோ அடைக்கும் தாள் என்பதற்கு**
**இலக்கணமாய்**
**இலக்கியமாய்**
**இன்றும் என்றும்**
**விளங்குமிடம்**
**கல்வாரிக்குன்றே நீ**
**பலிக்களம்**
**பாசக்களம்**
**பரமன்களம்**
**பக்தி நிறை பலிக்களம்**

**பலிக்களம் நோக்கி ஏகுதடா**
**செம்மறிப் புருவை இதோ**
**நிலை உடல் தளர்ந்து வேகுதடா**
**நிமலனின் நிழலும் வாடுதடா**
**கால் சோர்ந்து கை சோர்ந்து**
**கடின வழி தான் நடந்து**
**கசையடியும் வசை மொழியும்**
**இசை முழங்கப் போகுதடா!**

## காட்சி 1

## நிகழ்ச்சி

# இயேசுவைக் கொலை செய்யச் சதித் திட்டம்



**பரிசேயன் 1.** நாமும் தான் எத்தனை எத்தனை வழிகளை வகுத்தோம். புத்திக்குப் புரியாத மொழிகளையும் பழிகளையும் புதைத்தோம். கண்ட பலன், பழியும் பாவமும் நம்மையே சூழ்ந்து வருகின்றன. சட்டத்தை நீட்டினோம்.

**பரிசேயன் 2.** திட்டத்தைத் தீட்டினோம்.

**பரிசேயன் 1.** எல்லாம் மட்டமாயின.

**பரிசேயன் 2.** நாம் தான் கெட்டவர்கள் போல் ஆகிவிட்டோம்.

**பரிசேயன் 1.** உலகம் முழுவதும்அவனைப் பின்செல்கின்றது.

**பரிசேயன் 2.** நம்மைப் பைத்தியக்காரர் ஆக்கி விட்டது.

**பரிசேயன் 3.** பைத்தியக்காரர் என்று மட்டும் இந்தப் பாழும் உலகம் கருதிவிட்டாலும், அது பரவாயில்லை. ஆனால், அவன் உயிரோடு இருப்பதென்றால், நாம் உண்மையாகவே பைத்தியக்காரர் ஆகிவிடுவோம் என்பதுதான் எனது முடிவான கருத்து . . .

**தலைவன்:** ஏ! பார்த்தீர்களா? பாருங்கள்! ஏறெடுத்துப் பாருங்கள். போர்தொடுத்தவன் போகும் போக்கைப் பாருங்கள்.

**கைப்பாஸ்:** கடைசிக்கட்டம். கழுத்திலே கயிறு சுருங்குகின்றது. விதியும் வீணனுடன் விளையாடுகின்றது. வினையும் வேகமுடன் சதிராடுகின்றது.

**தலைவன்:** புழுதி கிளம்புகின்றது. புத்தி குழம்புகின்றது. போர் முரசு கொட்டுகின்றது. இன்னும் நாம் மூடர்களாக இருந்தால், யானைவரும் பின்னே மணி ஓசை வரும் முன்னே என்பதை உணராது இருப்போம்.

**சதுசேயன்:** செல்வாக்கு உயருகின்றது; செருக்கு வளருகின்றது; எம் சிந்தையும் வெந்து போகின்றது.

**தலைவன்:** வெந்து போகின்றது. நல்ல வேடிக்கை. வேங்கை ஒன்று பாய்ந்துவர அதை வெள்ளாடாகக் கணித்து விட்டோம். எமதேவன் எழுந்துவர அவனை எலிபோல் எண்ணிவிட்டோம். சிங்கம் சினந்து எழ அதைச் சிற்றெறும்பாகக் கருதிவிட்டோம்.

**அன்னாஸ்:** எல்லாம் அவன் செயல் என்பதும். . .

**தலைவன்:** தவறு! தட்டிக்கேட்கத் தைரியம் இல்லையென்று கூறுங்கள்.!

**கைப்பாஸ்:** ம். . ம். . . உஸ். . . அதோ பாருங்கள்.

**பாடல்:**

**குலமகனே ~ தங்கக்**
**குலமகனே**
**கோமகன் தாவீதின் திருமகனே**
**தூயர் எம் இறைவனின் ஒரு மகனே**

**அமைதியின் அண்ணலே அருமகனே**
**மகிமையின் மன்னனே மனுமகனே**
**இறைவனின் பெயரினில் வருமகனே**
**நிறைவெனும் பெயர்தரும் நிதிமகனே.**



*(இயேசு பவனி வரல்)*

**தலைவன்:** என்ன சபையோரே, என்ன? இன்னுமா தீரவில்லை உங்கள் கலக்கம்? ஹ. . . இன்று தூக்குமேடையில் நிறுத்தப்பட்டிருப்பது நமது அரசியல் உரிமையல்ல, நம் ஆண்டவன் ஆணையல்ல. நமது வளம் நிறைந்த பழமை. பத்து நூற்றாண்டைக்கண்ட பண்பாடு. பரமன் பரிந்தளித்த பக்தியின் மதம். இவைகள் வாழவேண்டுமா? வளம் பெற்று வானளாவ வளர வேண்டுமா? இன்றேல், நற்செய்தி என்ற நச்சுப் போர்வையில், அதிகாரம் என்ற அழுக்குப் பாதையில், அருள், அன்பு என்ற அழிவுப்போதையில், நம் சரித்திரத்துக்குச் சாவு மணி அடித்துச் சமாதிகட்டும் இந்தச் சந்தர்ப்பவாதியைத் தொலைத்து விடுவதா?

**பரிசேயன் 1.** வேதபாரகரும் பரிசேயரும் சொல்லுகிற யாவையும் செய்யுங்கள் அவர்கள் செய்வதைமட்டும் பின்பற்ற வேண்டாம் என்கிறான்.

**பரிசேயன் 2.** "கள்ள ஞானிகளே, உங்களுக்கு ஐயோ கேடு" என்று உரக்கக்கத்துகிறான்.

**பரிசேயன் 1.** குருட்டு வழிகாட்டிகளே உங்களுக்குச் சாபம் என்று சபிக்கின்றான். மதியிழந்து கதியற்று வாழும் கரடிக்கூட்டமே! குழப்பமும் கூத்தும் செய்து குலத்தைக் குழிதோண்டிப் புதைக்கும் குருட்டுச் சந்ததியே! பாவத்திலே பண்பிழந்து, பக்திமிழந்து, பரகதியிழந்து, பரமன் கருணையிழந்து பரிதவிக்கும் பாம்புக்குட்டிகளே!!

**பரிசேயன் 2.** நரகத்தீர்வை உங்களுக்கு நாலு பக்கத்தாலும் நல்வரவேற்பு விடுக்கின்றது, என்று நாக் கூச்சமின்றிக் கூறுகின்றானே.

**சதுசேயன்:** இதை மறுக்க, இதை மறைக்க, இந்தச் சபை, அதாவது மக்களின் தலைவர்களைக் கொண்டுள்ள சபை, எடுக்கப்போகும் திட்டமென்ன? விடுக்கப்போகும் தீர்ப்பு என்ன? என்பதுதான் கேள்விக்குறி. தனிப்பெரும் தலைவர்களே! ஏன் இந்த மௌனம்?

**பரிசேயன் 3.** சட்டத்தை உருவாக்கியது நாமல்ல. வாழும் நெறியைக் காட்டிக்கொடுத்ததும் நாமல்ல.

**தலைவன்:** மோசேஸ்! அவர் எழுதிவைத்ததை நாம் விளக்கிக்காட்டுகின்றோம். அவர் கூறியபடி வாழுங்கள் என்று மக்களுக்கு அறிவூட்டுகின்றோம். ஆனால் இவன், நேற்றைக்கு முந்திய நாள் தோன்றிய முட்டாள், அந்தப் பதவிப் பீடத்திலிருந்து மோசேசையே பொறிக்கத் தயாராக இருக்கின்றானென்றால். . .

**சதுசேயன்:** கருமம் முழுக்க முழுக்க முற்றிவிட்டது என்றுதான் பொருள். முன்பு கூறப்பட்டது அப்படி, ஆனால் நான் கூறுகின்றேன் இப்படி, என்று நாக்குப் புரளாமல் குளறும் இந்த நயவஞ்சகன் யார்? எங்கிருந்து வந்தான்? ஆ!

**பரிசேயன் 1.** ஆ! கேட்கவேண்டிய கேள்வி. மெசியாஸ் என்று தன்னைக் கூறிக்கொள்ளுகிறான் இவன். யாருமே அறியாத நசரேத்தூரில் உதித்தவன், நன்னெனிறியில் வழிகாட்டும் நானிலத்தலைவனாக இருக்கவேண்டுமாம். பேரே தெரியாத பெண் ஒருத்திக்கு மகனாகப்பிறந்தவன், பெரியவர் பட்டியலில் தன் பெயரை வரைந்துவிடத் துடிக்கிறான்.

**பரிசேயன் 2.** பண்பு என்றால் எதுவெனத்தெரியாத பட்டிக்காட்டில் பிறந்தவன், பாருக்கு வழிகாட்டப் போகின்றானாம் வழிகாட்ட (***சிரிப்பு***)! யார் தெரியுமா இவன் தந்தை?. . . ஒரு . . . தச்சன் . . .

**எல்லோரும்:** (***சிரிப்பு***) . . . தச்சன்

**பரிசேயன் 3.** இப்படியான ஏழ்மையிலே, தாழ்மையிலே, வறுமையிலே, சிறுமையிலே பிறந்தவன்தானா மெசியாஸ்– கிறிஸ்து– இரட்சகர் (***சிரிப்பு***) சீ. . . சொல்பவனுக்கு மதியில்லாது விட்டாலும் கேட்பவனுக்கும் மதியில்லையா? என்ன!

**கைப்பாஸ்:** நீங்கள் கூறுவதில் உண்மை இருப்பதை உணர்வோம். இவன் ஒரு புரட்சிக்காரன். மதத்திலே புரட்சி, அரசியலிலே புரட்சி, ஆகையால் மக்களிடையேயும் புரட்சி உண்டாகப் போகின்றது. சட்டம் விதிப்பது ஒன்று; அவன் போதிப்பதோ இன்னும் ஒன்று. எடுத்துக்காட்டாக, " விபச்சாரத்தில் யாராவது கையும் மெய்யுமாகப் பிடிபட்டால் அவளைக் கல்லால் எறிந்து கொல்ல வேண்டும் . . ."

**பரிசேயன் 1.** என்பதுதானே சட்டம்.

**அன்னாஸ்:** "உங்களுக்குள்ளே குற்றம் செய்யாதவன் முதன் முதல் அவள் மேல் கல்லை எறியட்டும்" என்று ஒரு முறை விபச்சாரி ஒருத்தியைச் சூழ்ந்திருந்த கூட்டத்தைப் பார்த்துக் கூறினான். அவள் தப்பினாள்.

**பரிசேயன் 3.** சட்டத்தை அவமதித்த துட்டனை . . .

**தலைவன்:** சும்மா விடுவது அபாயம், பெரியோரே, அபாயம்!

**கைப்பாஸ்:** ஓய்வு நாளைத் தூய்மைப்படுத்த அன்று எதுவுமே செய்யாமல் இருக்கவேண்டும் என்கிறது சட்டம். அப்படியான ஓய்வுநாளை அவன் எத்தனை முறை மாசு படுத்தி இருப்பான். புத்திக்குப் புரியாத புதுமைகளைச் செய்திருப்பான். விநோ தப்பிரியர்களுக்கு விதம் விதமான வித்தைகளைக் காட்டியிருப்பான்.

**அன்னாஸ்:** ஒருநாள் பிணியால் பீடித்திருந்தவனைக் குணமாக்கினான். அன்று ஓய்வு நாளென்று எடுத்துக்காட்டிய போது "ஓய்வு நாள் மனிதனுக்காக உண்டாக்கப்பட்டதல்லாமல், மனிதன் ஓய்வு நாளுக்கல்லன். ஆனால், மனுமகன் ஓய்வுநாளுக்கும் தலைவனாக இருக்கிறார்" என்றான்.

**பரிசேயன் 3.** அதனுடைய உள் அர்த்தம் சட்டத்திற்கு மேலானவன், தான், என்று சொல்லாமல் சொல்லி விட்டான்.

**சதுசேயன்:** மோசேஸ் யாரோ, எவரோ என்ற விநோதமான, விபரீதமான . . .

**கைப்பாஸ்:** அது மாத்திரமன்று. ஆபிரகாமிலும் தானே உயர்ந்தவன் என்று பலதரம் கூறியிருக்கிறான்.

**தலைவன்:** இது தேவதூஷணம்! கொடிதிலும் கொடிது!!.

**அன்னாஸ்:** "நீங்கள் ஆபிரகாமை உங்கள் தந்தையென்று கூறினீர்கள். ஆனால் ஆபிரகாமுக்கு முதல் நானிருக்கிறேன்" என்றான்.

**பரிசேயன் 3.** அவமானம்! அவமானம்!! ஆபிரகாம் என்ற அன்புத்தந்தைக்கு அஞ்சலி செய்ய மறுப்பவன் அவனியில் வாழ அருகதையற்றவன்.

**கைப்பாஸ்:** பாவங்களை மன்னிக்கத் தன்னால் முடியுமென்று பறைசாற்றி இருக்கிறான்.

**பரிசேயன் 1.** ஆ. . .அதாவது, தான் ஒரே கடவுளுக்குச் சமமானவன் என்று

**பரிசேயன் 3.** ஹ. . . அபச்சாரம்! அபச்சாரம்!! சட்டத்தைக் காக்கவேண்டியவர்கள் இவனை முறியடிக்கவேண்டிய திட்டங்களை ஏன் இதுவரைக்கும் உருவாக்காதிருந்தார்கள்.

**தலைவன்:** கடவுளின் பெயரைச் சொல்லிக்கள்ளம் பண்ணித்திரியும் கயவனுக்குக் கண்டிப்பாகத் தண்டனை கொடுக்க வேண்டிய கருமத்தில் . . .

**கைப்பாஸ்:** பொறுதி! பொறுதி! பொறுமையாகக் கருமத்தை அலசி ஆராய்வோம். அவனைச் சுற்றி முன்னுக்கும் பின்னுக்கும் ஏராளமானவர்கள் தாளம் போடுகிறார்கள். படியாதவர்கள் – பாமரமக்கள் – பாதகமறியாதவர்கள் – அவன் பாதத்தையே பின் தொடர்ந்து பவனி செல்லுகிறார்கள். இது கிளர்ச்சியின் அறிகுறி.

**அன்னாஸ்:** இதற்கு முன் இப்படிப் புரட்சி செய்தவர்கள் – கிளர்ச்சிக்குத் தலைமை தாங்கியவர்களின் கதி – எங்களுடைய மனதில் இன்றும் உயிரோடு ஊசலாடிக்கொண்டிருக்கிறது.

**கைப்பாஸ்:** இந்தக் கிளர்ச்சியை நாம் கிள்ளி எறிய வேண்டும். இவனை இப்படியே விட்டு விட்டால் உரோமானியர்கள் வருவார்கள்; உபத்திரவம் தருவார்கள்; எலும்பை ஒடிப்பார்கள்; இரத்தத்தைக் குடிப்பார்கள். நாட்டை அழிப்பார்கள்! மக்களை ஒழிப்பார்கள்!

**அன்னாஸ்:** அது கடந்தகாலச் சரித்திரம் சான்று பகரும் அழிக்கமுடியாத உண்மை.

**கைப்பாஸ்:** உங்களுக்கு இது தெரிகின்றதா? இந்த உண்மையை இட்டு எப்போதாவது சிந்தித்தீர்களா? அதாவது, மக்கள் எல்லோரும் அழியாதபடிக்கு ஒருவன் இறப்பதுதான் பொது நன்மை. நமது ஊரை அழிவிலிருந்து காப்பது நம் கடமை.

**தலைவன்:** அந்தக் கடமையின் பெயரால் கேட்கிறேன்! கடவுள் குலத்தின் பெயரால் கேட்கிறேன்! தாய்த்திரு நாட்டின் தனிப்பெரும் வாழ்வின் பெயரால் கேட்கிறேன் அவன் இறக்கவேண்டும்!

**பரிசேயன் 1.** அவனுக்கு அளிக்கவேண்டிய தண்டனை மரணம்!

**பரிசேயன் 2.** அணு அணுவாக உயிரை அழிக்கும் மரணம்!!

**சதுசேயன்:** அற்பர்களின் பரிசான மரணம்!!!

*(ஒரு வேலையாள் உள்ளே வருதல்)*

**வேலையாள்:** யாரோ ஒருவன் தங்களுடன் பேசுவதற்குக் காத்திருக்கிறான். ஏதோ முக்கியமான விஷயமொன்று கூற வேண்டுமாம்.

**அன்னாஸ்:** ம். . . எல்லாம் அவன் செயல்.

**கைப்பாஸ்:** பெயர்?

**வேலையாள்:** யூதாஸ்.

**அன்னாஸ்:** ம். . . ம் . . யூதாஸ்.

**கைப்பாஸ்:** யூதாஸ்? யூதாஸ்! யூதாஸ் யாராக இருக்கமுடியும்? ஓ! சரி! உள்ளே வரச்சொல்.

*(யூதாஸ் உள்ளே வருதல்)*

**பரிசேயன் 1.** யூதாஸ்!

**பரிசேயன் 2.** ஸ்கரியோத்!!

**தலைவன்:** யூதாஸ் ஸ்கரியோத்!!!

**சதுசேயன்:** ஆம்! அவனே தான்

**அன்னாஸ்:** இயேசுவுடன் திரியும் பன்னிரண்டு மடையருள் ஒருவன்!

**யூதாஸ்:** நீங்கள் விளங்காது பேசுகின்றீர்கள். இயேசுவை நான் உங்களுக்குக் காட்டிக்கொடுத்தால் என்ன கொடுப்பீர்கள்?

**கைப்பாஸ்:** உண்மையாகவா? யூதாஸ் நீ . . .

**யூதாஸ்:** கைக்கூலி என்ன என்று தான் . . .

**கைப்பாஸ்:** ஆ! கைக்கூலி. . . கைக்கூலி (***சிரித்தல்***) இதோ!தாமதமில்லையே (**பணியாளனிடம் பணம் கொண்டுவரப் பணித்தல்**) ஒன்று, பத்து. இருபது, இல்லை, முப்பது வெள்ளி நாணயங்கள்.

**யூதாஸ்:** ஆ! முப்பது! முப்பது!! முப்பது!!!

**கைப்பாஸ்:** ஆமாம் முப்பது. . . யூதாஸ்! உன் பெயரை வரலாற்றில் வரையப் போகின்றாய். நமது தாய்த்திரு நாட்டிற்கும் தரம்மிக்க தலைவர்களுக்கும் தனிப்பெரும் சேவைசெய்யப் போகின்றாய்.

**பரிசேயன் 3.** காட்டிக் கொடுப்பதென்றால் கூட்டம் இல்லாத வேளையில் நடக்கவேண்டும். அல்லது வேண்டாத விபரீதம் விளையும்.


***(எல்லோரும் தங்களுக்குள் பேசுதல்)***

**அன்னாஸ்:** கும்பிடப் போனதெய்வம் குறுக்கே வந்த மாதிரி, நமது எண்ணப்படி எல்லாமே அனுகூலமாகின்றது. எல்லாம் அவன் செயல்!

**கைப்பாஸ்:** இவ்வளவு சுலபமாகக் காரியம் கைகூடுமென்று கனவு முதலாகக் கண்டிருக்கமாட்டோம். . ம்! ஆயத்தமாகட்டும் அணிகலன்கள். . . ஆயுதங்கள். . . ஆள் திரள்கள். . . வெற்றி நமதே!

# காட்சி 2
## நிகழ்ச்சி

## இயேசுவின் கடைசி இரவுணவு



**உரை:** அன்பை அழிக்க அரக்கர் கூட்டம் அட்டகாசம் புரிகிறது. ஒளியை மறைக்க இருள் அமர்க்களப்படுகிறது. இக்கிறிஸ்துவை முடித்துக்கட்டிவிட யூதத் தலைவர்களும் சட்டவல்லுனர்களும் சதித்திட்டமிட்டனர், குருத்துரோகி யூதாஸின் உதவியுடன். . . கிறிஸ்துவோ காலம் அண்மித்துவிட்டதை உணர்ந்தார். வரலாறு தம்முன் தவம் கிடப்பதையும் அறிந்தார். உலகிற்குத் தம் மரண சாசனத்தின் சில சிறந்த கொடைகளையும் கொடுக்க முன்வந்தார். இம்மையில் இருந்த தம்மவரைத் தெய்வ அன்பிலும் அன்பால் அளவற்ற அன்பு செய்தார்.

*(பாதங்களைக் கழுவி முடித்தல்)*

**இயேசு:** நான் என்ன செய்தேன் என்பதை அறிவீர்கள். நீங்கள் என்னைக் குருவென்றும் ஆண்டவர் என்றும் அழைக்கின்றீர்கள். நீங்கள் அழைப்பது முறைதான். ஆனால், ஆண்டவராகிய நான் உங்களுடைய கால்களைக் கழுவுவேனென்றால் நீங்கள் ஒருவர் ஒருவருடைய கால்களைக் கழுவவேண்டும். நான் எவ்விதம்

செய்தேனோ அவ்விதமே நீங்களும் செய்ய வேண்டும். உங்கள் எல்லோரையும் எனக்கு நன்றாகத் தெரியும். ஆனால், ஆனால், என்னோடு சேர்ந்து அப்பம் உண்பவன் எனக்கு விரோதமாகத் தன் குதிக்காலைத் தூக்குவான் என்ற தேவவார்த்தை நிறைவேற வேண்டும். மெய்யாகவே, மெய்யாகவே நான் கூறுகிறேன். உங்களில் ஒருவன், உங்களுக்குள் ஒருவன் என்னைக் காட்டிக்கொடுப்பான்.

*(பரபரப்பு. ஒருவர் ஒருவரைப் பார்த்தல்)*

**இராயப்பர்:** ஆண்டவரே! நானா?

**இயாகப்பர்:** நானா ஆண்டவரே அந்தத் துரோகி?

**தோமை:** ஆண்டவரே! நானோ உம்மைக் காட்டிக் கொடுப்பவன்?

**பிலிப்பு:** ஆண்டவரே! நானா அந்தப் பாவி?

*(கடைசியாக யூதாஸ் ஸ்கரியோத்)*

**யூதாஸ்:** நானா?

**இயேசு:** நீயே கூறிவிட்டாய்.

*(இராயப்பர் அருளப்பருக்குக் குறிப்புக் காட்டல்)*

**அருளப்பர்:** ஆண்டவரே! அவன் யார்?

**இயேசு:** நான் இந்த அப்பத்தை இரசத்தில் தோய்த்து யாருக்குக் கொடுக்கிறேனோ, அவன் தான் என்னைக் காட்டிக் கொடுப்பவன். மனுமகன் தன்னைக் குறித்து எழுதப்பட்டபடியே போகிறார். ஆயினும், அவர் எந்த மனிதனால் காட்டிக் கொடுக்கப்படுவாரோ அவனுக்கு ஐயோ கேடாம்! அவன் பிறவாதிருந்தால் அவனுக்கு நலம்.

*(ஸ்கரியோத்துக்கு அப்பம் கொடுத்தல்)*

**இயேசு:** **(யூதாசை நோக்கி)** நீசெய்யப்போவதை விரைவாகச் செய்துமுடி

*(அப்பத்தை எடுத்து ஆசீர்வதித்து)*

**இயேசு:** இதைப்பெற்று உண்ணுங்கள் இது என் சரீரம்.

*(எல்லோருக்கும் கொடுத்தல். பின் பாத்திரத்தை எடுத்து வணக்கம் செய்து)*

**இயேசு:** இது என்னுடைய இரத்தம். இதை நீங்கள் அருந்துங்கள். இது பாவப்பொறுத்தலின் நிமித்தம் எல்லோருக்காகவும் சிந்தப்படும் முடிவற்ற புதிய உடன்படிக்கையின் இரத்தம்.

*(எல்லோருக்கும் கொடுத்தல்)*

**இயேசு:** அன்புக்குழந்தைகளே! நான் உங்களுக்கு ஒரு புதிய கட்டளையைக் கொடுக்கிறேன். நான் உங்களை அன்பு செய்ததுபோல நீங்களும் ஒருவர் மீது ஒருவர் அன்பு கொண்டிருந்தால்தான் நீங்கள் என்னுடையவர்கள் என்பதை எல்லோரும் அறிந்து கொள்வார்கள். தந்தை என் மேல் அன்பு கூர்ந்ததுபோல நானும் உங்கள்மேல் அன்புகூர்ந்தேன். என் அன்பில் நிலைத்திருங்கள்.

**இயேசு:** குறிக்கப்பட்ட நேரம் அண்மிவிட்டது. இன்றிரவு நீங்கள் எல்லோரும் என் நிமித்தம் இடறல்படுவீர்கள். "மேய்ப்பனை அடிப்பேன். மந்தையின் ஆடுகள் சிதறுண்டு போகும்" என்று எழுதியிருக்கின்றது.

**இராயப்பர்:** ஆண்டவரே! உம்மைப்பற்றி மற்றவர்கள் இடறல் பட்டாலும் நான் ஒரு போதும் இடறல்படமாட்டேன்.

**இயேசு:** சீமோன்! சீமோன்!! இன்றிரவு கோழி கூவு முன் மும்முறை என்னை நீ மறுதலிப்பாய். இது சத்தியம்!

**இராயப்பர்:** ஆண்டவரே! உம்முடன் இறக்கவேண்டி வந்தாலும் நான் உம்மை மறுதலிக்கமாட்டேன்.

**எல்லோரும்:** மறுதலிக்கமாட்டோம். ஆண்டவரே, மறுதலிக்கமாட்டோம்.

*( இயேசு தம்மவர்களுடன் தைலமரச் சோலைக்குச் செல்லுகிறார்)*

# காட்சி 3
## நிகழ்ச்சி

# தைல மரக்காவில் இயேசு



**உரை:** கிறீஸ்துவும் அவருடையவர்களும் அன்பின் தந்தையை வேண்டுவதற்கு அமைதி சூழ்ந்த தைல மரச்சோலையை அண்டிப் போகிறார்கள். அங்கு, கவலைக்குக் கரையுண்டா? கண்ணீருக்கு வரையுண்டா? வேதனைக்கு எல்லையுண்டா? சோதனைக்கு முடிவுதான் உண்டா? இயேசுவைப் பொறுத்தமட்டில், உடல் நடுங்கி, உள்ளம் உருகி, உயிர் பதறி, வியர்வை கொட்டுகின்றது. பாவம் பயங்கர வடிவம் எடுத்துப் பரமன் முன் தோன்றுகின்றது. அன்பே தெய்வம்! அவ் அன்பின் ஆறாத்துயரம் இதோ!

*(இயேசு ஒலிவ மரப் பூங்காவை அடைதல்)*

**இயேசு:** என் ஆத்துமமானது மரணமட்டும் துயரத்தால் நிறைந்திருக்கிறது. நீங்கள் இங்கே தங்கியிருங்கள். . . என்னோடு விழித்திருங்கள். . . வேண்டுங்கள்.

**இயேசு:** பிதாவே! இயலுமாகில் இந்தப்பாத்திரம் என்னைவிட்டு அகலட்டும். அனால், என்னுடைய மனதின் படியல்ல. உம்முடைய விருப்பத்தின்படியே ஆகட்டும்!

பாடல்:

**துன்பத் தைலமரக்காவில்**
**துஞ்சித் துடித்து துவண்ட பரன்**
**இன்பம் என்றும் இசைத்தோங்க**
**இகத்தின் பாவச் சுமை தாங்க**
**அன்பின் அனையே தன் துணையாய்**
**அலறும் பவமே வன்கணையாய்**
**முன்பின் நடை தளர்ந்தோடி**
**முதலோன் சரணம் வேண்டினரே**

***(திரும்பி வந்து மூன்று சீடர்களையும் பார்த்து)***

**இயேசு:** என்ன! ஒருமணிநேரம் என்னுடன் விழித்திருக்க உங்களால் முடியவில்லை? சோதனைக்கு உடன்படாதபடி விழித்திருங்கள். செபம் செய்யுங்கள். மனம் மிகவும் வேகம் உள்ளது தான். ஆனால், உடல் பலம் குறைந்தது.

பாடல்:

**எந்தாய் எனைநீர் கார் என்றே**
**ஏன்தான் ஏங்கித் துடித்தீரோ?**
**வந்தோர் சீடர் தரைபடிய**
**வாடித்துயர் முடித்தீரோ**
**அந்தோ! அன்பே! அருள் பாலா!**
**அனலோ? அலையோ? இக் கேடு**
**மைந்தா! நொந்தாய் எமக்காக**
**தந்தோம் தாங்காப் பவம் ஐயோ.**

**இயேசு:** பிதாவே! பிதாவே!! என் பிதாவே!!! இந்தப்பாத்திரம் என்னைவிட்டு அகலப்பண்ணியருளும். ஆனால், என் மனதின் படியல்ல. உம்முடைய மனதின்படியே ஆகட்டும்.

***(திரும்பிவந்து சீடர்களிடம்)***

நீங்கள் இப்போது தூங்குங்கள். நன்றாக ஓய்வு எடுத்துக் கொள்ளுங்கள். இதோ! இந்த நேரம் மனுமகன் பாவிகளிடம் கையளிக்கப்படப் போகிறார். எழுந்திருங்கள் போவோம். என்னைக் காட்டிக் கொடுப்பவன் நெருங்கி விட்டான்.

***(அப்போது யூதாஸ் கிட்டவந்து)***

**யூதாஸ்:** குருவே! வாழ்க!!

**இயேசு:** யூதாஸ்! எதற்காக வந்தாய்? நண்பா! என்னை முத்தமிட்டா காட்டிக்கொடுக்கின்றாய்?

*(இயேசு சனங்களை நோக்கி)*

**இயேசு:** நீங்கள் யாரைத் தேடி வந்தீர்கள்?

**தலைவன்:** நசரேத்தூர் யேசுவைத் தேடிவந்தோம்.

**இயேசு:** அவர் நான் தான். (**எல்லோரும் பின்னிடுதல்**)

**இயேசு:** யாரைத் தேடுகிறீர்கள்?

**தலைவன்:** நசரேனுவாகிய இயேசுவை.

**இயேசு:** நான் தான் அவர் என்று கூறினேன். நீங்கள் என்னைத் தேடிவந்தால் மற்ற இவர்களைப் போக விடுங்கள்.

*(இயேசு பிடிபடல். இராயப்பர் ஒருவன் காதை வாளால் வெட்டுதல்)*

**இயேசு:** (**இராயப்பரைப் பார்த்து**)உன்னுடைய வாளை உறையில் போடு. வாளை எடுப்பவர்கள் வாளினால் மடிவார்கள். என்னுடைய தந்தையிடம் கேட்டால் வானத்திலிருந்து பன்னிரண்டிற்கும் அதிகமான படைகளை அனுப்ப மாட்டாரென்றா கருதுகிறாய்? இல்லை! வேதநூலில் எழுதப்பட்டிருப்பது நிறைவேற வேண்டும்.

*(காது வெட்டுண்டவனை குணப்படுத்தல்)*

*(இயேசு சனங்களை நோக்கி)*

**இயேசு:** ஒரு கள்வனைப் பிடிக்க வருவதைப்போல் கத்திகளோடும் தடிகளோடும் வந்திருக்கிறீர்கள். அல்லும் பகலும் ஆலயத்தில் போதித்துக்கொண்டிருந்தேன். அப்போது ஏன் என்னைப் பிடிக்கவில்லை? ஆனால், இதுவே உங்கள் நேரமும், இருளின் வல்லமையும்.

*(இயேசுவைப் பிடித்துக்கொண்டு போதல். சத்தம். அப்போஸ்தலர் சிதறல்)*



யார் நீ இறைவா
யார் நீ?
கைதியோ கதியிதோ?
யார் நீ இறைவா யார் நீ?
கள்ளர் ஆளும் உலகம் இது
பிள்ளை வாழ இடமேது
உள்ளம் எல்லாம் உருகுதே
வெள்ளம் போல் கண் பெருகுதே!

# காட்சி 4
## நிகழ்ச்சி

## யூதத்தலைமைக் குரவர்களின் முன் இயேசு குற்றம் சுமத்தப்படல்



**கைப்பாஸ்:** வானகத்தையும் வையகத்தையும் உமது வார்த்தை ஒன்றால் வடிவெடுக்கச் செய்த வல்லபக் கடவுளே! இஸ்ரவேல் இனத்தைத் தெரிந்தெடுத்த இரக்கம் நிறைந்த இறைவனே! எகிப்தியரின் அடிமைத்தனத்திலிருந்து அடியவர்களின் தந்தையரை பகலில் மேகத்தூண்போலவும், இரவில் நெருப்புப்பிழம்பு போலவும் தோன்றி மீட்டுக்காத்த கருணை வள்ளலே! ஒளிமயமாய் விளங்கும்ஒப்பற்ற தேவனே! உமது தெளிவான ஒளியை நாம் நிறைவாகப் பெற அருள்புரியும். அதே ஒளியால் இங்கு கூடியிருக்கும் திருச்சபை மன்றத்தினர், உண்மை எதுவெனக் கண்டுணரவும் நீதியின் செங்கோலை வேதமுறையிற் செலுத்தவும் தயைபுரியும்! ஆமென்.

**எல்லோரும்:** ஆமென்.

**கைப்பாஸ்:** சபையோரே! உங்களுக்கு முன்பாகக் குற்றவாளிக்கூண்டிலே ஏற்றப்பட்டிருக்கும் இயேசு, குற்றவாளியா? இல்லை, சுத்த வாளியா? என்று தீர்ப்பளிப்பது உங்கள் ஒவ்வொருவரினதும் தலையாய கடமை. தனிப்பெரும் பொறுப்பு!.. . . ம். . . குற்றச்சாட்டுக்கள். . .

**தலைவன்:** சொல்லப்போனால் இன்றிரவே போதாது. இருந்தும் ஒரு சில, இதோ! ஆபிரகாம் என்பவர் நமது பிதாப்பிதா மட்டுமல்லர்; இறைவனால் தெரிந்தெடுக்கப்பட்டு – ஆசீர் அளிக்கப்பட்டு – அன்பர் எனப் போற்றப்பட்டவர். அவருக்கு முன்னமே தான் வாழ்ந்து வந்ததாக அப்பட்டமாக அறிவித்தான்.

**பரிசேயன் 1.** அபச்சாரம்! அபச்சாரம்!!

**தலைவன்:** சட்டத்தை அளித்தவர் மோயீசன்! விடுதலை கொடுத்த தலைவன்! வேதம் எழுதிவைத்த முதல்வன்! வாழும் விதத்தை வகுத்த வழிகாட்டி! அவரையே அவரது அரியணையிலிருந்து இவன் பொறித்து விட்டானென்றால். . .

**பரிசேயன் 3.** தந்தைக்கே தலைவணங்க மறுத்தவன், சட்டத்தை விட்டானா?

**தலைவன்:** இல்லை. தொட்டான். சாம்பராகச் சுட்டான். முன்பு கூறப்பட்டது அப்படி, நானோ கூறுகிறேன் இப்படி என்று சட்டநூலில் புரட்சிவாதத்தை நட்டான்!

**பரிசேயன் 1.** ஓய்வு நாளை அவமதித்தான்.

**சதுசேயன்:** மதகுருக்களை மனமார வைது மானபங்கப்படுத்தினான்.

**தலைவன்:** கேடு தரும் மூடர் என நம் எல்லோருக்கும் பட்டம் சூட்டினான்.

**பரிசேயன்1.** ஆலயத்திலே ஆணவத்துடன் அகங்காரமாகக் கர்ச்சித்தான்.

**பரிசேயன் 3.** அது மட்டுமா? கயிறெடுத்தான், காணிக்கைப் பொருள்களை விற்ற வியாபாரிகளைக் கலைத்து அடித்தான். இது என்ன கோவிலா? இல்லைக் குள்ள நரிகள் போன்ற கள்ளக் கூட்டத்தினர் வாழும் கோபுரமா? என்று வெடித்தான்.

**பரிசேயன் 1.** ஆலயத்தை இடி. அதை மூன்று இரவு விடியுமுன் கட்டுவேன் என முடித்தான்.

**பரிசேயன் 3.** ஆமாம்! இவனுக்கெதிரான ஒரு குற்றச்சாட்டு. அவன் ஒரு முறை கூறினான், "இந்த ஆலயத்தை இடித்து மூன்று நாட்களுக்குள் கட்டுவேன்" என்று.

**கைப்பாஸ்:** பாரதூரமான குற்றச்சாட்டு! பார்க்கலாம், சாட்சிகளை வரவழையுங்கள்!

***(சாட்சி வரல்)***

உனது பெயர்?

**பதில்:** ஆரோன்.

**கைப்பாஸ்:** உண்மையை மட்டும் சொல்வாய்.

**பதில்:** சத்தியமாய்.

**கைப்பாஸ்:** உன்னுடைய சாட்சியத்திலே இவனுடைய உயிர் ஊசலாடுவதை நன்றாக உணர்கிறாயா?

**பதில்:** ஆமாம், பெரிய குருவே!

**கைப்பாஸ்:** நீ உன் கண்களால் பார்த்தாய் – காதுகளால் கேட்டாய். இவனையும், இவன் சொன்னதையும்?

**பதில்:** ஆம் குருவே!

**கைப்பாஸ்:** என்ன கூறினான்?

**பதில்:** "கையால் ஆக்கப்பட்ட இந்த ஆலயத்தை இடித்துவிட்டுக் கையாலாகாத இன்னும் ஒன்றைக் கட்டுவேன்" என்றான்.

**கைப்பாஸ்:** இதை நீ ஒப்புக்கொள்கிறாயா? ஒப்புக்கொள்கிறாயா என்று கேட்டேன். ம். . . பதில் இல்லை. . . சரி அடுத்த சாட்சி.

***(சாட்சி வரல்)***

**கைப்பாஸ்:** பெயர்?

**பதில்:** யாகப்பு.

**கைப்பாஸ்:** நீ இவன் உச்சரிக்கக் கேட்ட வார்த்தைகளை எமக்குச் சொல்லமுடியுமா?

**பதில்:** இப்போது கூடக் காதுக்குள் ரீங்காரமிட்ட வண்ணம்இருக்கின்றன. "இந்த ஆலயத்தை இடியுங்கள், மூன்று நாட்களுக்குள் திரும்பவும் அதை எழுப்புவேன்."

**கைப்பாஸ்:** ம். . . நீயும் போகலாம். சபையோரே! இரு சாட்சிகளின் வாக்குறுதியையும் நீங்கள் கேட்டீர்கள். என்ன கருதுகின்றீர்கள்?

**அரிமத்திய சூசை:** சபையோரே! சட்டத்தை மதிக்கிறோம் என்ற பாசாங்கு தான். ஆனால் சரக்கு இல்லை. சாட்சிகள் இருவருக்கும் முழுக்க முழுக்க முரண்பாடுகள் உள்ளன. முதலாவது சாட்சி சொன்னான், "நான் இந்த ஆலயத்தை இடித்து முன்று நாட்களுக்குள் கட்டுவேன்" என்று இயேசு கூறியதாக. இரண்டாவது சாட்சியோவென்றால், "இந்த ஆலயத்தை இடியுங்கள்" எனச் சொன்னதாக. இந்த இரு வசனங்களுக்கும் மேட்டுக்கும் மடுவுக்கும் உள்ள வித்தியாசம் உண்டென்பதை நான் சொல்லி நீங்கள் அறியவேண்டியதில்லை. ஆனால் ஒன்று மட்டும் உண்மை. சாட்சிகளில் ஒருவன் உண்மை பேசவில்லை. நமது சட்டம் பணிக்கின்றது, இரு சாட்சிகளும் ஒன்றையே சொல்லவேண்டும் என்று.

**கைப்பாஸ்:** இதை இட்டுத் தர்க்கித்துக்கொண்டிருக்க நேரமுமில்லை, அவசியமுமில்லை. (**இயேசுவைப் பார்த்து**)உனக்கு எதிராக எத்தனையோபேர் எவ்வளவோ விதமாகக் குற்றம் சாட்டியிருக்கிறார்கள். நீ போதித்தது தவறு என்று சாட்சி கூறுகிறார்கள். இவ்விதமான குற்றச்சாட்டுக்களுக்கெல்லாம் நீ என்ன பதில் அளிக்கிறாய்? நீ செய்தது, கூறியது எல்லாம் குற்றம் என்று ஒத்துக்கொள்கிறாயா?

**இயேசு:** நான் உங்களிடம் கூறினால் என்னை நம்பமாட்டீர்கள். நான் உங்களிடம் கேட்டால் மறுமொழி கூறமாட்டீர்கள்; என்னை விடுதலையாக்கவும் மாட்டீர்கள். ஏன், நான் ஒளித்து மறைத்து உலகத்திற்குப் பேசவில்லை. வெளியரங்கமாய்ப் பேசினேன். செபஆலயத்தில் போதித்தேன். நீங்கள் எல்லோரும் கூடித் தர்க்கிக்கும் இடத்தில் போதித்தேன். அந்தரங்கமாய்ப் பேசியதில்லை. நான் போதிக்கக் கேட்டவர்களுக்கு என்ன கூறினேன் என்று தெரியும். என்னிடம் ஏன் கேட்கிறீர்கள்.?

**தலைவன்:** (**கன்னத்தில் அறைதல்**) தலைமைக் குருவுக்கு நீ இப்படியா தட்டிப் பதில் சொல்வது?

**இயேசு:** நான் தவறாகப் பேசியிருந்தால் தவறு எது என்பதை எடுத்துக் காட்டு. பேசியது உண்மையானால் நீ எதற்காகக் கன்னத்தில் அறைந்தாய்?

**கைப்பாஸ்:** உண்மை! இன்னும் ஒரு சாட்சியை வரவழைப்போம். . ம்.

***(சாட்சி வரல்)***

உனது பெயர்?

**பதில்:** யூதா.

**கைப்பாஸ்:** நீ எப்படிக் கேட்டாய்? இவன் எப்படிச் சொன்னான்?

**பதில்:** "கடவுள் ஆலயத்தை மூன்று நாட்களுக்குள் கட்டமுடியும்"

**அரிமத்திய சூசை:** சபையோரே! மீண்டும் குழப்பம் தீர்ந்தபாடில்லை. மூன்றாவது சாட்சியத்தின் படி இந்த ஆலயத்தை இடிக்க – கட்ட– என்னால் முடியுமென ஒரு புழுகு போலக்கூறப்பட்டிருக்கிறது. முதலாவது சாட்சியத்தில் ஒரு தீர்க்கமான முடிவு; இங்கு ஒரு புழுகு. எது உண்மை? நீங்களே பதிலளியுங்கள். ஒரு யூதமகனின் உயிர் உங்கள் பதிலில்தான் தங்கி இருக்கிறது.

**கைப்பாஸ்:** எது எப்படி இருந்தாலும் மூன்று நாட்களில் தான் கட்டுவதாகக் கூறியது உண்மைதானே?

**அரிமத்திய சூசை:** நமது சட்டத்தின் படி அது மட்டும் இவரைக் குற்றவாளி என்று நிரூபிக்கப் போதுமானதல்ல. எனவே இவருக்கு எதிராகக் குற்றம் எதுவும் சுமத்தப்படவில்லை.

**நிக்கோதேமு:** சபையோரே! அவர் இப்படியாகக் கூறியிருந்தாலும் அந்த உரையினுடைய உண்மை பொய்யை நாம் எவ்வாறு அறியலாம். இந்த ஆலயம் இடிக்கப்பட்டால் அல்லவா இவரால் அதைக் கட்டி முடிக்கலாமா இல்லையா என்பது தெரிய வரும்.

**அரிமத்திய சூசை:** பெரியோரே! குற்றவாளிக் கூண்டிலே நிற்பவருக்கு எதிராக எதுவும் நிரூபிக்கப்படவில்லை. ஆதலால் அவரை விடுதலைசெய்யுமாறு விநயமாய் வேண்டுகிறேன்.

**கைப்பாஸ்:** ஹ. . . ஹ. . . (***சிரிப்பு***) அது அவ்வளவு இலேசான கருமமல்ல. இவன், தான் மெசியா, கிறீஸ்து என்று அழுத்தம் திருத்தமாகக் கூறி இருக்கிறான். இந்தக்குற்றச்சாட்டுக்கு இவன் பதில் சொல்லியே ஆகவேண்டும்.

**நிக்கோதேமு:** ஒரு குற்றச்சாட்டை முதலில் சுமத்திவிட்டு வேறு ஒன்றைத் திடீரெனச் சுமத்துவது சட்ட நுட்பங்களுக்கெல்லாம் விரோதமானது.

**அன்னாஸ்:** விரோதமும் குரோதமும் வில்லங்கமாக இழுக்கப்படாது, விளக்கம் தொடரட்டும்.

**நிக்கோதேமு:** கட்டிலிலே தூங்கவேண்டிய நாம் சட்டசபையிலே ஏங்கிக்கொண்டிருக்கிறோம். நடுச்சாமம் ஆகிவிட்டது. ஆனால் நல்லபடியாகக் குற்றச்சாட்டெதுவும் எண்பிக்கப்படவில்லை. இறுதியாகச் சாட்டப்பட்ட குற்றம், தான் மெசியாஸ், மீட்பர் என்பது. அப்படித்தான் அவர் கூறியிருந்தாலும், அதில் என்ன தவறு? அதைத் தவறென நாம் நிரூபித்தோமா? தான்தான் கிறிஸ்து என்று கூறுவது குற்றமா? கூறுங்கள் சபையோரே.

**கைப்பாஸ்:** அவர்கள் கூறவேண்டிய அவசியமில்லை. இதோ! இவனே கூறட்டும். கூரைமீதிருந்து கொக்கரித்ததைத் திருச்சபை இதிலே திட்டமாய்க் கூறு! நசரேனுவாகிய இயேசுவே! அன்றும் இன்றும் என்றும் வாழும் கடவுளின் பெயராலே –வல்லப தேவனின் பொய்யில்லா ஆணையால் கேட்கிறேன். நீ கடவுள் மகனாகிய கிறீஸ்துவா?

**இயேசு:** நீரே கூறிவிட்டீர்!. . . நான் தான் கிறீஸ்து என்று.

**கைப்பாஸ்:** வானகத்தின் பெயராலும், வையகத்தின் பெயராலும், நித்தியத்தின் பெயராலும், சத்தியத்தின் பெயராலும், இரக்கம் சுரக்கும் இறைவனின் பெயராலும் கேட்கிறேன். கூறு, நீதான் கிறீஸ்துவா?

**இயேசு:** நீரே கூறிவிட்டீர்.

**கைப்பாஸ்:** கடைசிமுறையாகக் கேட்கிறேன். கர்த்தாதி கர்த்தரின் கனம் மிகுந்த ஆணையால் கேட்கிறேன். கடல் அமர–காற்று அமர – கதிரவன் கதிர் அமர–கட்டளை கொடுத்த கடவுள் துணைகொண்டு கேட்கிறேன். நீ கடவுள் மகன் தானா?

**இயேசு:** ஆம். நான் தான் கடவுள் மகன். அன்றியும், மனுமகன் வல்லப மாட்சியுடன் தந்தையின் வலப்பக்கம் அமர்ந்து வான மேகங்களின் மீது வருவதையும் நீங்கள் காண்பீர்கள் என்று உறுதியாகச் சொல்லுகின்றேன்.

**கைப்பாஸ்:** ஆ! தேவதூஷணம்! தேவதூஷணம்!! நாக்கூச்சமின்றி நாக்குத்தழும்பேறியவன் நஞ்சைக்கக்கிவிட்டான். இனியும் நமக்கு வேறென்ன வேண்டும்? குற்றமேன்? குற்றச்சாட்டேன்? சாட்சி ஏன்? சாட்சிகள் ஒப்பு ஏன்? சங்கடமேன்? சண்டாளனை உயிரோடு விடுவதுதான் ஏன்? நீங்களே கேட்டீர்களே, உங்களுடைய தீர்ப்புத் தான் என்ன? சபையோரே என்ன?

**தலைவன்:** குற்றவாளி! குற்றவாளி!!

**பரிசேயன் 3.** தன் வாயாலே தானே மாட்டிக்கொண்டான். இவனுக்கு அளிக்கவேண்டியது, மரணதண்டனை.

**எல்லோரும்:** மரணதண்டனை.

**கைப்பாஸ்:** எதற்கும் ஒரு வாக்கு எடுப்போம்.

*(ஒரு மூலையில்)*

**ஒருத்தி:** நீயும் கலிலேயனாகிய இயேசுவுடன் இருந்தாய்!

**இராயப்பர்:** நீ சொல்வது ஒன்றுமே எனக்கு விளங்கவில்லை.

**ஒருத்தி:** உன்னுடைய பேச்சே உன்னை வெளிப்படுத்துகின்றது!

**இராயப்பர்:** சத்தியமாக நான் ஒன்றுமே அறிய மாட்டேன்!

**ஒருத்தி:** இல்லை. நீ ஏமாற்றுகிறாய்!

**இராயப்பர்:** சத்தியமாக – சத்தியமாக – அவரை எனக்குத் தெரியாது.

*(கோழி கூவுகின்றது)*

**கைப்பாஸ்:** ஆம்.... அதுதான் தகுந்த தண்டனை.

**அன்னாஸ்:** தேசாதிபதி பிலாத்துவிடம் கூட்டிச் செல்வோம். அவரே தண்டனையை வழங்கட்டும்.

பாடல்: **யார் நீ இறைவா! யார் நீ? கைதியோ?**
**கதியிதோ யார் நீ இறைவா**

## காட்சி 5
## நிகழ்ச்சி

# பிலாத்து நீதிமன்றம்முன் இயேசு



*(கொல்லவேண்டும் என்ற சத்தத்துடன் சனத்திரள் வரல்)*

**பிலாத்து:** இது என்ன?

**தலைவன்:** நீதிகோரி வந்த மேதைகளின் திரள்.

**பிலாத்து:** நீதிகோரும் அளவிற்கு நிகழ்ந்தது?

**தலைவன்:** நிகழக் கூடாத குற்றம்.

**பிலாத்து:** அதைப் புரிந்தது?

**தலைவன்:** இவன்.

**பிலாத்து:** இவன்?

**தலைவன்:** ஒரு குற்றவாளி.

**பிலாத்து:** குற்றவாளி! குற்றவாளி!! இவனுக்கு எதிராக என்ன குற்றம் சாட்டுகிறீர்கள்?

**தலைவன்:** இவன் குற்றவாளி இல்லையென்றால் இவனை உம்மிடம் கொண்டுவந்திருக்க மாட்டோம்.

**யூதர்:** உம்மிடம் இவனைக் கொண்டுவந்திருக்க மாட்டோம்.

**பிலாத்து:** அப்படியென்றால் இவனை நீங்களே கூட்டிச் செல்லுங்கள். உங்களுக்கு வேத சட்டம் உண்டு. அதன்படி இவனுக்குத் தீர்ப்பளியுங்கள்.

**கைப்பாஸ்:** எவனுக்கும் மரணத்தீர்ப்பு அளிக்க எமக்கு அதிகாரமில்லை.

**பிலாத்து:** மரணத்தீர்ப்பு ! அது எதற்காக?

**பரிசேயன் 1.** இவன் எமது மக்களிடையே புரட்சியை ஏற்படுத்தி வருகிறான். குழப்பத்திற்குத் தலைமை தாங்குகிறான்.

**பரிசேயன் 2.** நமது அரசனாகிய செசாருக்கு வரி செலுத்த வேண்டாம் என்று மக்களைத் தூண்டுகிறான்.

**பரிசேயன் 3.** நான்தான் கிறீஸ்துவாகிய அரசன் என்று பறை சாற்றுகிறான்.

**தலைவன்:** ஆ!. . . ஆ! கிறிஸ்துவாகிய அரசன் (*சிரிப்பு*)

**பிலாத்து:** (***இயேசுவிடம் வந்து***) நீ யார்? யூதர்களுடைய அரசன்தானா?

**இயேசு:** இதை நீராகக் கூறுகின்றீரா? அல்லது இப்படி மற்றவர்கள் என்னைக் குறித்து உம்மிடம் சொல்லியிருக்கின்றார்களா?

**பிலாத்து:** நான் யூதனா, என்ன? உன்னுடைய மக்களும் குருக்களும் உன்னை என்னிடம் நீதி வழங்கும்படி கையளித்தார்கள். நீ என்ன செய்தாய்?

**இயேசு:** எனது அரசு இவ்வுலகத்திற்கு உரிமையானது அல்ல. அது அப்படி ஒன்றானால், என் காவலர்கள் யூதர்களுக்கு எதிராகப் போர் செய்திருப்பார்கள். எனது அரசு இவ்வுலகத்திற்கு உரியதில்லை.

**பிலாத்து:** ஆ! அப்படியென்றால் நீ உண்மையாக ஓர் அரசன்?

**இயேசு:** நீரே கூறிவிட்டீர் நான் அரசனென்று. உண்மைக்கு உறுதிகொடுக்க உலகில் உதித்தேன். உண்மையை நாடி வாழும் எவனும் என்குரலைக் கேட்கிறான்.

**பிலாத்து:** உண்மையென்றால்?

***(வெளியில் சென்று)***

நான் அவனிடத்தில் எதுவித குற்றத்தையும் காணவில்லை.

**கைப்பாஸ்:** (***சத்தத்துடன்***) இவன் ஒரு கலகக்காரன். கலிலேயா நாடுதொடங்கி இங்குமட்டும், யூதேயா தேசமெங்கும் போதித்துக்கொண்டு வந்தான். மக்களைப் புரட்சிக்குத் தூண்டிவிட்டிருக்கிறான்.

**தலைவன்:** புரட்சிக்காரன்! கலகக்காரன்!!

**பிலாத்து:** இவன் கலகக்காரன் என்றுதான் என்னிடத்தில் ஒப்புவித்தீர்கள். ஆனால், உங்கள் முன்பாக அவனை விசாரணை செய்தும் நீங்கள் சாட்டும் குற்றங்கள் எதையும் காணவில்லை. ஏரோது முதலாகக். . .

**பின்னணியில்:** ஹ. . . ஹ. . . ஹ. . ம் புதுமைகள் புரிந்தான் எனப் புகழ்ந்தார்கள். . . அடப்பாவி இவன் ஒரு பயித்தியம். மேலாடை ஒன்றைப் போர்த்திவிடுங்கள். . ம். சபாஷ். . . இன்று முதல் ஏரோதனுக்குப் பிலாத்து நண்பன் என்று போய்ச் சொல்லுங்கள்.

**பிலாத்து:** காணவில்லை. மரணதண்டனை பெறுவதற்கு ஏதுவான எதுவும் செய்யவில்லை. ஆதலால் இவனைத் தண்டித்துச் சாட்டையால் அடித்து, விடுதலை செய்கிறேன்.

**தலைவன்:** இல்லைக் கொல்லவேண்டும்! கொல்லவேண்டும்!!

**எல்லோரும்:** கொல்லவேண்டும்! கொல்லவேண்டும்!!



*(கிறீஸ்துவைக் கசையால் அடித்தல்)*

**உரை:** என்ன கொடுமை! ஏன் இந்தக் கோலம்! எதற்காக இந்த வேதனை! ஈயக்குண்டுகள் கட்டியுள்ள வார்களால் அடிக்கிறார்களே! இதோ அடி விழும் ஒலியைக் கேள்! துடிக்கும் துடிப்பைப் பார்! கன்றும் உடல், கசியும் இரத்தம், கிழியும் சதை, பெருகும் காயம், பாயும் குருதி. அம்மம்மா!. . . உடலைக்கசையால் வாட்டும் வேதனையில் கடும் சொற்களையும், இழிமொழிகளையும், பழிவசைகளையும் பொழிகின்றார்கள் இந்த இரக்கமற்றோர்.

*(முள்முடி சூட்டுதல்)*

தொகையறா: **கார்முகிலாம் திருக்கூந்தல் பொழிவது தான்**
**வான் மழையோ**
**தார்வேந்தன் பதமலர்கள் பிழிவதுதான்**
**தேன் துளியோ**
**பார்தாங்கும் தலைவன் முடி பாய்வதுதான்**
**எது மொழிவீர் எது மொழிவீர்.**

பல்லவி

பாடல்: **இரத்தம் இரத்தம்.**
**செக்கச்சிவந்த இரத்தம்.**

சரணம்

**முத்துமுத்தான இரத்தம் ~ அன்பு**
**மூட்டிடுமே மனம் நித்தம்**
**கொத்துக் கொத்தான இரத்தம் ~ பவம்**
**ஓட்டிடுமே திரு முத்தம்.**

**சொட்டுச் சொட்டான இரத்தம் ~ பரன்**
**பட்டதல்லோ தினம் எட்டில்**
**மொட்டு மொட்டான இரத்தம் ~ இயேசு**
**கொட்டினரே பூங்காவில்.**

**உரை:** அரசன் என்று கூறிய அன்புக்கடவுளுக்கு என்ன அவமானம் செய்கின்றார்கள். முடி சூட்டுகிறார்கள். மணி முடியா? இல்லை, மலர் முடியா? இல்லை! இல்லை! முண்முடி! அதைச் சிரசில் அழுத்துகிறார்கள். அவர் செய்த குற்றம் என்ன? புரிந்த கொடுமை என்ன? சொல், உலகே சொல்!

**இத்தனையும் போதாமல்**
**இறைமகனைப் பாராமல்**
**முள் எடுத்தார் முடி தொடுத்தார்**
**மூச்சுடனே அடியடித்தார்**
**கொட்டியது செம்பால் முட்டியது மண்மேல்**
**மூடியது தூய இமை**
**வாடியது வாண் முகமே**

**பின்னணி:** (***பிலாத்துவின் மனைவியின் கடிதம்***) நான் இன்று ஒரு பயங்கரக் கனவு கண்டேன். தயவு செய்து இந்த மனிதனுக்கு எத் தீங்கும் இழைக்காதீர்கள்.

**பிலாத்து:** பாஸ்குத் திருநாளில் உங்களுக்கு ஒரு குற்றவாளியை விடுதலை செய்வது வழக்கம். இங்கு இருக்கின்றான் பரபாஸ். இவன் ஒரு கொலைபாதகன். அங்கு இருக்கின்றான் உங்களுடைய அரசன். இவர்களில் யாரை விடுதலை செய்யவேண்டும்? இந்தக் கொலைகாரனையா? அல்லது உங்களுடைய அரசனையா?

**தலைவன்:** இவனையில்லை! பரபாசை!

**யூதர்:** இவனையில்லை! பரபாசை!

**பிலாத்து:** அப்படியென்றால் உங்கள் கிறீஸ்துவை என்ன செய்ய வேண்டும்?

**தலைவன்:** சிலுவையில் அறைந்து கொல்லும் (2)

**யூதர்:** சிலுவையில் அறைந்து கொல்லும் (2)

**பிலாத்து:** அவனிடத்தில் நான் எந்த விதக் குற்றமும் காணவில்லை!

**தலைவன்:** பரபாசிற்கு

**யூதர்:** விடுதலை

**தலைவன்:** பரபாசிற்கு

**யூதர்:** விடுதலை

**பிலாத்து:** இவன் என்ன தீங்கு இழைத்தான்? இவனிடத்தில் மரணத் தீர்வைக்குரிய குற்றம் எதுவும் காணப்படவில்லை. இவனைத் தண்டித்து விட்டேன். இனி விடுதலையாக்குகிறேன்.

**தலைவன்:** இவனைச் சிலுவையில் அறைந்து கொல்லும்.

**எல்லோரும்:** சிலுவையில் அறைந்து கொல்லும் (2)

**பிலாத்து:** அவனிடத்தில் ஒரு குற்றமும் காணேன். அவனை உங்கள் முன்பாக அழைத்து வருகிறேன்.
இதோ மனிதன்!

**எல்லோரும்:** சிலுவையில் அறைந்து கொல்லும் (2)

**பிலாத்து:** நான் இவனிடத்தில் எந்த வித குற்றத்தையும் காணவில்லை. ஆதலால் நீங்களே இவனை ஒப்புக்கொண்டு சிலுவையில் அறையுங்கள்.

**கைப்பாஸ்:** எங்களுக்கு வேத சட்டம் உண்டு. அதன்படி இவன் இறந்தாக வேண்டும். இவன், தான் கடவுளுடைய மகன் என்று கூறுகிறான்.

***(இயேசுவுடன் பிலாத்து தனித்து பேசுதல்)***

**பிலாத்து:** நீ எங்கே இருந்து வந்தாய். . . (**மௌனம்**) என்னிடத்தில் பேசமாட்டாய்? உன்னைச் சிலுவையில் அறைய எனக்கு அதிகாரம் உண்டு என்பதை அறிவாயா? அல்லது உன்னை விடுதலையாக்க வல்லமை உண்டென்பதையும் உணர்வாயா?

**இயேசு:** மேல் உலகத்திலிருந்து உமக்குக் கொடுக்கப்படாதிருந்தால் என் மேல் உமக்கு எந்த அதிகாரமும் இருக்காது. ஆகையால் என்னை உம்மிடத்தில் கையளித்தவர்களுக்குத்தான் பெரிய பாவம் உண்டு.
***(பிலாத்து வெளியே வர)***

**மக்கள்:** அவனைக் கொல்லும்! கொல்லும்!

**பிலாத்து:** அவன் எவ்வித குற்றமும் செய்யவில்லை.

**கைப்பாஸ்:** இவனை விடுதலை செய்தால் நீர் செசார் அரசனுக்கு நண்பனில்லை.

**பிலாத்து:** கருத்தற்ற பேச்சு.

**கைப்பாஸ்:** இல்லை, இது தான் எம் கலகத்தின் மூச்சு.

**பிலாத்து:** கலகம் இல்லை. களங்கம்!

**கைப்பாஸ்:** கலங்க வேண்டும்

**பிலாத்து:** யார்?

**கைப்பாஸ்:** பிலாத்து.

**பிலாத்து:** யாருக்கு?

**கைப்பாஸ்:** செசாருக்கு

**பிலாத்து:** எதற்கு?

**கைப்பாஸ்:** துரோகத்துக்கு

**பிலாத்து:** எப்படி?

**கைப்பாஸ்:** செசாருக்குப் போட்டி

**பிலாத்து:** இந்த முடிவு?

**கைப்பாஸ்:** எம்முடையது.

**பிலாத்து:** ஆகவே?

**கைப்பாஸ்:** தப்பமுடியாது

**பிலாத்து:** தப்பவைப்பது?

**கைப்பாஸ்:** மடமையின் எல்லை

**பிலாத்து:** தவறவிடாதது–

**கைப்பாஸ்:** எமது கடமையின் தொல்லை

**பிலாத்து:** மதமும் அரசியலும்–

**கைப்பாஸ்:** எமக்கு ஒன்று

**பிலாத்து:** ஓ! அதன்படி இவன்–

**கைப்பாஸ்:** செசாருக்கு விரோதியாய் இருக்கிறான். தன்னைத்தானே அரசன் என்று அழைக்கும் எவனும் செசாருக்கு போட்டி, விரோதி.

**அன்னாஸ்:** ஆம் விரோதியாய் இருக்கிறான்.

**மக்கள்:** விரோதியாய் இருக்கிறான்.

***(இயேசுவை வெளியே கொண்டுவரல்)***

**பிலாத்து:** இதோ! உங்களுடைய அரசன்!

**மக்கள்:** ஒழிக! ஒழிக! இவனைக் கொல்லும், கொல்லும்.

**தலைவன்:** சிலுவையில் அறையும்.

**மக்கள்:** சிலுவையில் அறையும்.

**பிலாத்து:** உங்களுடைய அரசனை நான் எவ்விதம் சிலுவையில் அறைவது?

**கைப்பாஸ்:** செசார் அல்லாது வேறு அரசன் எமக்கு இல்லை.

**பிலாத்து:** (**கைகழுவுதல்**) இந்த நீதிமானின் இரத்தத்தின் மட்டில் எனக்கு பாத்தியதை இல்லை. அது என்மீது சிதறாது இருக்கட்டும். நான் குற்றமற்றவனாக இருக்கிறேன். நீங்களே பார்த்துக் கொள்ளுங்கள். ***(முத்திரை பொறித்தல்)*** சிலுவையில் அறைந்து கொல்லுங்கள்.

**தலைவன்:** அவனுடைய இரத்தம் எங்கள் பேரிலும் எங்கள் மக்கள் பேரிலும் இருக்கட்டும்.

**(சத்தம் ~ கூக்குரல்)**

## காட்சி 6
## நிகழ்ச்சி

# இயேசு சிலுவையுடன்செல்லுதல் யூதாஸ் தற்கொலையும் இராயப்பரின் மனமாற்றமும்.



**உரை:** மரணதண்டனை. . . வாழ்வைப்பறிகொடுக்கும் அளவிற்கு அவர் என்ன செய்து விட்டார்! ஆடைகளை அகற்றினர். அது போதாதா? முள்முடி சூட்டினர். அதுவும் போதாதா? காறினர் துப்பினர். தூற்றினர்; அடித்தனர்; அவமதித்தனர். ஐயோ! கடைசியாகச் சிலுவை சுமத்திக் கல்வாரிக்கு நடத்திச் செல்லுகின்றனர். பாரச்சிலுவையை மட்டுமில்லை, பாவச்சுமையையும் சுமந்து கீழே விழுகிறார் இயேசு.

## சிலுவைப்பாதை

**தொகையறா:** **பாரச்சுமை தாங்கும் பார்மகளும் பதறுகின்றாள்**
**நேசக்குமரன் தாய் தேவிமரி கதறுகின்றாள்**
**ஈர இதயமற்ற ஈனர் தயை உதறுகின்றார்**
**பாவச்சிலுவை இதால் பாச மகன் சிதறுகின்றான்.**

**பாடல்:** **அன்பின் பழி படரும் அமலன் அம்மா ~நம்**
**துன்பக்கதை தொடரும் துணைவன் அம்மா**
**இன்பக்கடல் சுரக்கும் இறைவன் அம்மா ~ இன்று**
**முன்பின் நடை தளரும் முதல்வன் அம்மா!**

**வஞ்சம் தலை எழுந்தே வந்ததம்மா ~ அவர்**
**நெஞ்சம் நிலைவிழுந்தே வெந்ததம்மா**
**தஞ்சம் எதுவுமின்றி நடந்ததம்மா ~ அடி**
**அஞ்சும் சதி குவிந்து கிடந்ததம்மா.**

**உரை:** யூதாஸ்! ஆம்! குருத்துரோகம் புரிந்தவன்–முப்பது வெள்ளிக்காக மூர்த்தியைக் காட்டிக் கொடுத்தவன் –ஓடினான் –ஓடினான்.

**பாடல்:** **மனம் எங்கே நிலை எங்கே**
**மரம் எங்கே கிளை எங்கே**
**மடித்து முடியும் கயிறெங்கே**
**வாழ்வெங்கே வழி எங்கே**
**வாழ்ந்தும் என்ன பயன் இங்கே**
**இங்கே! இங்கே! இங்கே!**

**உரை:** குருவை மும்முறை மறுதலித்தார் சீடன் இராயப்பர். குற்றம் புரிந்தாலும் –அமைதி தெரியாது அலைந்தாலும் –கண்ணீர் வடித்த கடவுளின் கடைக்கண்ணோக்கைத் தேடினார்.

**இராயப்பர்:** இறைவா! என்னை மன்னித்துவிடு! மன்னித்துவிடு! குற்றம் புரிந்த பாவி நான்! பழி சுமந்த கோழை நான்! குருவைத் தெரியாதென்று மும்முறை மறுதலித்த மாபாதகன்–பாதகன்! இறைவா! மன்னிப்பாயா?! இந்த ஏழை வடிக்கும் கண்ணீரை–இல்லை, இதயம் பிளக்கும் செந்நீரைப் பார்ப்பாயா? இறைவா! அழுகின்றேன், அழுகின்றேன். அழுதுகொண்டே இருக்கின்றேன்!

*(சிலுவைப்பாதை தொடர்தல்)*


பாடல்:

**முத்தின் நகை முகமும் சிதைந்ததம்மா ~பவச்**
**சொத்தின் வினை உருவம் குலைந்ததம்மா**
**இரத்தக் கறை உலகில் புகுந்ததம்மா ~ துயர்**
**வித்தின் விளைநிலமும் சரிந்ததம்மா**

**கொஞ்சும் மகன் படும் இச் சோகம் அம்மா ~ தயை**
**விஞ்சும் இறை அன்பின் வேகம் அம்மா**
**துஞ்சும் துயர் மீட்பின் தாகம் அம்மா ~அலகை**
**வஞ்சம் துடைக்கும் அருள் மேகம் அம்மா**

# காட்சி 7
# நிகழ்ச்சி

## கல்வாரியில் இயேசு இறத்தல்



**உரை:** கல்வாரி மலை! அங்கு தான் கடவுளின் கொலை! நண்பகல் வேளையிலும் நாயகன் படும் வேதனையைக் காண நாலா பக்கத்திலுமிருந்து திரண்டு தேங்கி வழிந்து நின்றது மக்கள் திரள். அப்போது, அங்கு–ஆண்டவன் ஆடையைஅகற்றுகிறார்களே. இரு கரத்தையும் இறுகப் பிடித்து ஆணிகளை ஆவேசமாக அறைகிறார்களே! பாவிகட்கு பரமனின் ஆசீரையும், பக்தர்களுக்கு பரிவு நிறை கருணையையும், பாலகர்க்குப் பாசமுறு

அரவணைப்பையும், பாதை தேடி வந்தோர்க்கு ஒளியையும் வழியையும் காட்டிய கரங்கள், ஆணிகளால் துளைக்கப்படத்தான் வேண்டுமா? அமர தீபத்தை ஏற்றி, அன்புப்பாதையைப் போற்றி, அருள் நெறியைச் சாற்றி, அலைகடலின் மீது அமைதியுடன் நடந்த அமலனின் திருஅடிகள் சிலுவையில் அறையப்படுகின்றன. ஏன்? இது தான் அன்பு பெறும் பரிசா?. . . அமலன் உறும் கதியா? நீதியே! உன் நாவெங்கே? அறமே! உன் வாயெங்கே?. . . நெறியே! உன் மொழியெங்கே?. . . எங்கே?

**தலைவன்:** புதுமையிலே புது உலகைக்காட்டி – புனிதனின் வேஷத்தை மாட்டி – பக்தியுடன் பவனிவந்த பசுபதியே! ஒரு கடைசிவேண்டுகோள். நீ இறைவன் மகன் என்றால், இறங்கு உன் சிலுவை ஆசனத்தை விட்டு! அற்புதம், அதிசயம் எனக் கேட்கும் அன்பராகிய எமக்கு அத்தாட்சி அளி . . . ம். . . ம். . . சிலுவையை விட்டு இறங்கு.

**கைப்பாஸ்:** நாட்டின் நடுநாயகமென ஏடு போற்றும் ஏக தேவனின் கோவிலை – ஆண்டவன் வாழும் ஆலயத்தை அடியோடு அழித்து, மூன்று நாட்களுக்குள் மூச்சோடு கட்டி முடிப்பேன் என முரசொலித்தான். மற்றவர்களை இரட்சித்தவன் இன்று தானே அகப்பட்டுத் தத்தளிக்கிறான். கர்மவீரா!. . .இது தான் உன் மர்மமா!.. . . பார்க்கலாம். தப்பித்துக்கொள்.

**பரிசேயன் 1.** பாராள வந்த பட்டத்து மெசியாஸ்! இஸ்றாயேல் இனத்தின் இதய மன்னனாய் இறங்கி வந்த இறைமகன் கிறீஸ்து! இவன் மெசியாஸ் என்றால், மீட்பர் என்றால், சிலுவையை விட்டுக் கீழே இறங்கட்டும். . ம் இறங்கிவா!

**அன்னாஸ்:** கடவுள் கடவுள் என்று கச்சிதமாய்க் கடவுளின் பெயரைச் சொல்லிக், காலம் கழித்தானே! கடவுளின் பக்தனென்றால் இப்போது கடவுளே வந்து அவனைக் காப்பாற்றட்டும். கடவுளின் திருமகன். ஆகா!. . .

**கைப்பாஸ்:** கடவுளின் திருமகன் – கடமையின் குருபரன்– பக்தி நிறை பாலன் –சத்திய நற்சீலன் – பாவத்திற்குக் காலன். ஏ. . .

**பரிசேயன் 3.** எண்ணற்ற புதுமை செய்த நீ இப்போது மரத்தில் இருந்து மண்ணிலே இறங்கு. அப்பொழுது விண்ணகக் கடவுளெனத் திண்ணமாய் நம்புவோம். ம். . .

**இயேசு:** பிதாவே! பிதாவே! இவர்கள் அறியாமல் செய்கிறார்கள் இவர்களை மன்னித்து விடும்.

**தலைவன்:** மன்னிக்கட்டுமாம், மன்னிப்பு! மாபெரும் கொடைவள்ளல், மகத்தான பரோபகாரி, மன்னிக்கும்படி மன்றாடுகிறான்.

**அன்னாஸ்:** இல்லை, எம்மை எல்லாம் எள்ளி நகையாடுகிறான், இந்தக் கொள்ளிவைக்கவந்த கோமகன்.

**பரிசேயன் 2.** பிதாவே, பிதாவே என்று பித்தனைப் போல் கத்துகிறாயே! எங்கே பிதாவைக்காட்டு பார்க்கலாம்.

**அன்னாஸ்:** வான மேகத்தின் ஊடாக வரும் மனுமகன் இப்போது மன்னிப்புக் கேட்கும் கட்டத்தில் மண்டிக் கிடக்கிறான்.

(***தாயை நோக்கி***)

**இயேசு:** அம்மா இதோ உன் மகன்!

(***அருளப்பரை நோக்கி***)

இதோ உன் தாய்.

**விருத்தம்**

**கருணைசேர் விழிகள் கண்ணீர்க்கடலிலே கரைந்து ஆட**
**கடமையை முடிப்பாய் காதல் கனிமக வென்று பாட**
**காலடி தனிலே நின்ற கன்னியை நோக்கி மைந்தன்**
**பார் திருத்தாயே பாச மைந்தரின் தாய் நீ என்றார்.**

**இயேசு:** நான் தாகமாய் இருக்கிறேன்.

**இயேசு:** எல்லாம் முடிந்தது.

**இயேசு:** தந்தையே! தந்தையே! என் தந்தையே! என் ஆவியை உம் திருக்கரத்தில் ஒப்படைக்கிறேன். (***இறத்தல்***)


### இரங்கல் விருத்தம்

பூ முகத்தின் சாந்தி ஒளி அகன்றதம்மா
பொங்கு மணிச் செங்கதிரோன் மறைந்ததம்மா
வானகத்தேன் அமுதமலர் குவிந்ததம்மா
வாடாத வளர் தீபம் அணைந்ததம்மா
ஞான முகில் தவழுமலை சரிந்ததம்மா
நாதன் உயிர்ப்பலி நடந்து முடிந்ததம்மா
மாமரித்தாய் நெஞ்ச மலர் பிளந்ததம்மா
மாசறியாச் செல்வனுயிர் பிரிந்ததம்மா
அம்மா! அம்மா! அம்மா!



# காட்சி 8
## நிகழ்ச்சி

# இயேசு உயிர்த்தெழல்



**உரை:** கடவுள்மகன் கிறீஸ்து இறந்த பின் இரவு நேரம் அண்மியதும் நண்பர்களால் கிறீஸ்துவின் உடல் சிலுவையில் நின்று இறக்கப்பட்டுக் கல்லறைக்குள் அடக்கம் செய்யப்பட்டது. ஆனால், கடவுளுக்கும் கல்லறையா? கல்லறைக்கும் காவலா? பகலவன் முன்னே பனித்துளியா? அலைகடல் முன்னே அசை துரும்பா? வாழ்வின் ஊற்று முன் சாவின் நாற்றமா?
ஞாயிறு காலை. . .

**திடு திடு திடு மென பூமி அதிர்ந்தது,**
**பட பட படவென பாறை பிளந்தது.**

**விண்ணொளி மின்னிட**
**கண்ணிமை பின்னிட**
**கல்லறைக் கல்லுமோ சரிந்தது.**

**இறைமகன் வென்றார்~**
**கடவுளும் உயிர்த்தார்~**
**சங்கே முழங்கு**
**வெற்றிச் சங்கே முழங்கு,**

**இராயப்பர்:** கதை வேறு– கற்பனை வேறு– கடவுள் வகுத்த வரலாறு வேறு. கல்லறையில் இருந்து – கட்டுகள் தகர்ந்து கடவுளின் திருமகன் இயேசுக்கிறீஸ்து உயிர்த்தெழுந்தார். உலகறிந்த உண்மை இது. கண்ணீர் வடித்தவர் கண்ணீரின் விலையைச் சொன்னார். செந்நீரில் துடித்தவர், அப் பொன்னீரின் நிலையைச் சொன்னார். பாவம் தந்த பரிசு கண்ணீர். அக் கண்ணீருக்கும் ஒரு கருத்து உண்டு. நெஞ்சம் பிளந்த செந்நீருக்கும் ஒரு சிறப்பு உண்டு. மண்ணில் பிறக்கும் மனிதன் ஒவ்வொருவனுக்கும் தன்னையே மீட்கும் பலமும், தான் வாழும் உலகைக்காக்கும் வரமும் கொடுப்பது கடவுள் முகம் நோக்கும் கண்ணீர். கடவுளின் கண்ணீருடன் நம்முடைய கண்ணீரும் கலந்தால் வாழ்வு மலரும். அருள் வாழ்வு–அன்பு வாழ்வு–ஆண்டவன் வாழ்வு. அந்த வாழ்வைத் தரும் ஊற்று மேடைதான் **பலிக்களம்**

## ஆயர் கலாநிதி மேதகு வ. தியோகுப்பிள்ளை ஆண்டகையின்

# ஆசிச் செய்தி

கடந்த பத்து ஆண்டு காலமாக நாடக உலகில் தமக்கென ஒரு தனி இடத்தை வகுத்து, தமிழ் மணமும் கலை எழிலும் பொழியும் சிறந்த நிகழ்ச்சிகளைத் தயாரித்து வரும் திருமறைக்கலாமன்றத்தினர், "**பலிக்களம்**" என்னும் பக்தி நாடகத்தை வீரசிங்கம் மண்டபத்தில் மேடையேற்றும் இவ் வேளை எமது உள்ளம் நிறைந்த வாழ்த்துக்களைத் தெரிவிக்கிறோம். பரமன் கிறீஸ்துவின் பாடுகளைச் சித்தரிக்கும் "பலிக்களம்" பக்தி உணர்ச்சியை, பார்வையாளர் உள்ளத்தில் பதியச்செய்யும் என்ற நம்பிக்கை நமக்கு உண்டு. கலைக்கும், கடவுள் சேவைக்கும் தம்மை அர்ப்பணித்த திருமறைக்கலாமன்றத்தினர் இன்று போல் என்றும் வளர இறைவனை இறைஞ்சுகிறோம்.

**வணக்கம்**

**ஆயர் இல்லம்**
**யாழ்ப்பாணம்**
**3-4-1973**

**வ. தியோகுப்பிள்ளை**
**யாழ். ஆயர்.**

# இயக்குநர் பேசுகிறார்

கலைத்தாயின் கருணை உற்றேன்! கரம் கூப்பிக் கடவுளின் காலடியில் கலைச்சேவையை வைத்தேன்! கள்ளமற்ற வெள்ளை உள்ளம் படைத்த கலைஞர்களைப் பெற்றேன்! கலைமகள் தந்த கனவுகளை எல்லாம் கலங்காத நெஞ்சுடன் நனவாக்கிச் சுவைத்தேன்! கலையின் விலை கண்டேன்! தமிழின் அமுதுண்டேன்!

"கல்வாரியில் கடவுள்" என்ற பக்தி நாடகம் முதல் "**பலிக்களம்**" என்ற நிகழ்ச்சி வரை பிரமாண்டமான மேடை - வானொலி நாடகங்கள் திருமறைக் கலாமன்ற அரங்கில் களிநடனம் புரிந்தன.

நமது மன்றத்தின் பத்தாண்டுக் கலை வாழ்வின் முதிர்ச்சியை "**பலிக்களம்**" பிரதிபலிக்கும். இருநூறுக்கும் மேற்பட்ட கலைஞர்களைக் கொண்டும் இருபது அரங்கின் அகல- ஆழ அமைப்பைக் கொண்டும் உருவாக்கப்பட்ட வரலாற்று நிகழ்ச்சியான (ஏப்பிரல் 5. 1971) "அன்பில் மலர்ந்த அமர காவியம்" , "**பலிக்களம்**" என்ற பெயருடன் இருபது நடிகர்களைக் கொண்டும், இரண்டுக்கும் குறைவான அரங்க அமைப்பைக் கொண்டும், பல புதிய நாடகச்செயல்- நுட்பங்களைத் துலக்கும்!

இறுதியாக, இது பரமன் கிறீஸ்துவின்மேல் பக்தியைப் பெருக்கும் என்ற எண்ணத்துடன் "**பலிக்களத்தை**" மேடைஏற்றுகிறோம்.

**வணக்கம்**

**அருள் திரு நீ. மரியசேவியர்**
**1. 4. 1973**

# "பலிக்களம்" பாராட்டுகள்.

- பொதுவாக ஒரு தடவைக்குமேல் பார்த்து அனுபவிக்கத்தக்க அருளுணர்ச்சி தவழும் அரியதொரு பக்தி நாடகம் **பலிக்களம்**
**-சத்திய வேத பாதுகாவலன் -24. 3. 1973**

- சமய உணர்வோடு. கலைநுட்பங்களும் கலந்த சிறப்பான நாடகம்.
**-திரைப்படத் தயாரிப்பாளர் சி.ஏ. ரகுநாதன்.**

- கத்தோலிக்கக் குரவர்களில் இவ்வளவு கலையறிவு செறிந்தவர்களும் இருக்கிறார்களா? இயக்குநருக்கு என் பாராட்டுகள்.
**-டைரக்டர் சுஹேர் ஹமீட்**

- இத்தகைய பல நாடகங்களைத் திருமறைக் கலாமன்றத்தினர் தயாரித்தளித்து, தமிழ் கூறும் நல்லுலகிற்கும், கிறீஸ்துவ மறைக்கும் பெரும் புகழ் தேடித் தருவார்களாக.
**-புலவர் அரியநாயகம்.**

- உணர்ச்சி வசப்பட்டு அழுது விட்டேன்.
**-நடிகவேள் லடிஸ் வீரமணி.**

- சர்வதேச நாடகத் தரத்தில் ஒப்பிடக்கூடிய நாடகம் "**பலிக்களம்**"
**-இலங்கை வானொலி சரா இம்மானுவல்.**

# கலையரசு க. சொர்ணலிங்கம் அவர்களின் ஆசிச்செய்தி

## பலிக்களம்

இம்மாதம் 6ஆந் திகதி வெள்ளிக்கழமை வீரசிங்கம் மண்டபத்தில், திருமறைக் கலா மன்றத்தாரால் மேற்படி நாடகம் நடாத்தப்படவிருப்பதாக அறிகிறேன். இந்நாடகத்தின் ஆசிரியரும், இயக்குநருமான வண. பிதா. மரியசேவியர் அடிகள் அவர்கள் முன்பு நாடத்திய சில நாடகங்களைப் பார்த்திருக்கிறேன். நாடகக்கலையில் இவரைப்போல் அறிவு பெற்றவர்களைக் காண்பதரிது. இவரது நாடகங்களின் சிறப்பு யாதெனில் ஒழுங்கு, ஒழுக்கம் ஆகியவற்றைக் கண்டிப்பாகக் கடைப்பிடித்து கருத்துக்கள் ரசிகர் உள்ளங்களில் பதியுமாறு, சிறந்த கலைச்செறிவுடன் அமைந்திருப்பதே. அன்றியும் பல சிறந்த நடிகர்களும், பாடகர்களும், இந் நாடகத்தில் இருப்பதாக அறிகிறேன். ஆதலால் இந் நாடகத்தைப் பார்ப்பவர்கள் இன்பமான காட்சிகளைக் காண்பதன்றி சிறந்த சமய விளக்கங்களையும் உணர்ந்து கொள்வார்கள் என்பதே என் அபிப்பிராயம்.

வணக்கத்திற்குரிய பிதாவின் கலையார்வம் என்றும் குன்றாதிருக்குமாக.

**க. சொர்ணலிங்கம்.**
**2.4.1973**

# பாசம் நிறைந்த பலிக்களத்தை இன்றும் நாளையும் பார்க்கலாம். யாழ் திருமறைக் கலாமன்ற மற்றொரு படைப்பு.

**ப**ல ஆயிரம் ரூபா செலவில் இரண்டு நூறு கலைஞர்களைக் கொண்டு தயாரிக்கப்பட்டு யாழ்ப்பாணத்தில் மேடையேற்றப்பட்ட "அன்பில் மலர்ந்த அமரகாவிய" நாடகம் ரசிகர்கள் நெஞ்சத்தை விட்டு இன்னும் நீங்கியிருக்கமாட்டாது. ஆண்டுகள் இரண்டு கடந்து விட்டாலும், இந்த பிரமாண்டமான தயாரிப்பு பலரைக் கொள்ளை கொண்டு நினைவில் பதிய வைத்து விட்டது.

யாழ்ப்பாணத்தில் திருமறைக்கலாமன்றத்தினர் தான் இந்தப் பெருமைகளைத் தட்டிக் கொள்கிறார்கள். யாழ். திருமறைக்கலாமன்றமென்றதும் கலைமணி அருட்திரு நீ. மரியசேவியர் அடிகளாரின் உழைப்பும், ஆற்றலும் தான் காரணமென்பதைச் சொல்லவேண்டியதில்லை.! அதே திருமறைக்கலாமன்றத்தினர் பாசம் நிறைந்த "**பலிக்கள**"த்தை மேடையேற்றுகிறார்கள்! நேற்றும், நேற்று முன்தினமும் மேடையேற்றினார்கள் யாழ் திருக்குடும்பக் கன்னியர் மட திறந்த வெளியரங்கில்.

பார்க்கவில்லையே என்ற கவலை உங்களுக்கு வேண்டாம். இன்றும் நாளையும் மாலை "**பலிக்களம்**" மேடையேறும்! அதே திறந்த வெளியரங்கில் தான்! கல்வாரியில் கடவுள், கடவுள் வடித்த கண்ணீர், களங்கம், செந்தணல், எழுதிய கரம், காட்டிக் கொடுத்தவன், கபடமனக்காவலன் போன்ற பல சமய சமூக வெற்றிப்படைப்புகளையும் தந்தவர்கள் திருமறைக் காலமன்றத்தினர் தான். அன்பிற்கும் உண்டோ அடைக்கும் தாள் என்பதற்கு இலக்கணமாய், இலக்கியமாய் இன்றும் என்றும் விளங்கும் கல்வாரிக்குன்றாம் "**பலிக்கள**" த்தை அருட் திரு தேவராஜன் அடிகளார் தயாரித்துள்ளார். கதை, வசனம், பாடல்களை அருட் திரு நீ. மரியசேவியர் அடிகள் எழுதியுள்ளார். பலிக்களத்தைப் புத்தம் புதிய உத்திகளுடன் நெறிப்படுத்தியவரும் கலைமணி மரியசேவியர் அடிகளாரே! பலிக்களத்துக்குப் பிரத்தியேக செட்டிங்ஸ் அமைத்துள்ளார் ஏ.வி. ஆனந்தன். இசைத்திலகம் எம். ஜே. தாஸ் பலிக்களப் பாடல்களுக்கு இசை அமைத்துள்ளார். ஒளியமைப்பு குருநகர் துரையுடையது.

யாழ் மாவட்டத்தின் பல பாகங்களிலும், கொழும்பு, கண்டி, நீர்கொழும்பு, மன்னார் ஆகிய இடங்களிலும் விரைவில் பலிக்களம் மேடையேற்றப்படவுள்ளது. பலிக்களம் நிட்சயம் நீங்கள் பார்க்கவேண்டிய நாடகம்!

**ஈழநாடு -வாரமலர் -ஞாயிற்றுக்கிழமை -18-3-1973**

# பலிக்களம் பார்த்தோம்

அது ஜெருசலேமாக இருந்தது. தலையில் முள் முடியுடன் பாரமுள்ள சிலுவையை, இயேசு பெருமான், தன் தோள் மீது சுமந்து தள்ளாடிய தளர்நடையுடன் சென்று கொண்டிருந்தார். கொடிய யூதரோ அவரைக் கசையால் அடித்தடித்து இழுத்துச் சென்றார்கள். அந்நேரம் அவர் வலிபொறுக்கமாட்டாமல் ஒரு தடவை திடீரெனச் சோர்ந்து விழுந்தார். அந்த ஊரில் அந்த இடத்தில், அந்தநேரம், அந்தக் காட்சியை, என்னால் நின்று பார்க்க முடியவில்லை. உடனே எனது கண்களை மூடிக் கொண்டேன். மட்டுமல்ல; மனம் அடங்கிக் கற்சிலை போல் அசைவற்று நின்றேன். சில வினாடிகள் சென்றிருக்கலாம். எனது கண்களை மறுபடியும் திறந்து பார்த்தேன். நான் கண்ட இயேசுவும், படு பாதகரான யூதர் எல்லோருமே கற்சிலையாகி விட்டார்கள் என்கண்களை என்னால் நம்பமுடியவில்லை.

நாடகத்துறையில் தமக்கென ஒருபுதிய உத்தியைக் கையாளுகின்றார் இயக்குநர். "**பலிக்களம்**" என்னும் நாடகம் புதுமைக்கருத்துகளால் நிரப்பப்பட்டிருந்தது. பரந்த வெளியில் இருநூறு நடிகர்களைக் கொண்டு பல்லாயிரக்கணக்கான மக்களைத் திகைப்புப் கடலில் ஆழ்த்திய அடிகளார், சிறிய ஒரு மேடையிலும், இருபது நடிகர்களைக் கொண்டே மிகத் திறம்பட நடாத்தி, மக்களின் பாராட்டுதலைப் பெற்றுள்ளார்.

அருட் திரு. நீ மரியசேவியர் அடிகளார் அவர்கள் தமக்கேன ஒரு நிரந்தர நாடக மேடையை ஏற்படுத்திக் கொண்டால், நம் நாட்டு நாடகக்கலைஞர்கள் முன்னேறி, அத் துறையில் பணி செய்ய முடியும் என்பது எமது நற்கருத்தாகும். அடிகளாரின் அருந் தொண்டு நீடு வாழியாவே!

**"கலைக்கண்"**

# பலிக்களம் நாடகம்

**த**பசு கால அணியின் ஆரம்ப வழிமுறைக்கு ஒப்ப அண்மையில் (நான்கு நாட்கள்) தினமொரு நிகழ்ச்சியாக, குறிப்பிட்ட நேரத்தில், திருமறைக்கலாமன்றத்தினரால், யாழ் திருக்குடும்பக் கலையரங்கில் பலிக்களம் என்னும் (பாஸ்) றாமாஸ்கோப் நாடகம் பல்வகை உத்திகளோடு அரங்கேற்றம் செய்யப்பட்டது.

ஆதித்தாய் தந்தையின் வழி வழி வந்த மானிட ஜீவிகள் பாவ மழையில் நனைந்து, உலகப் புனிதத்தைச் சேற்றுச்சகதியாக்கினர். உலக உயர்வையழித்தனர். சமூகநேசத்தை மறந்தனர். அவ்வேளையில், மனுக்குலத்தின் மாட்சிக்காக, அவனியில் தோன்றி, அன்புக்கு இலக்கணமாக, இலக்கியமாக, இலட்சியமாக, வாழ்ந்து அமரத்துவ மடைந்த கிறீஸ்து நாதரின் இறுதிக்கால ஒப்பற்ற வாழ்வுச் சரித்திரம் தான் "**பலிக்களம்**" நாடகம்.

மானிதத்டதின் போதனையாகக் கொண்டிலங்கும் மாபெரும் வரலாற்றினை, ஒளி சிந்தும் தீக்குச்சிகளைப் பெட்டிக்குள் அடைத்தது போல், ஒரு சிறு கலையரங்கில், அரைக்கணமும் காட்சித்தொடர்பு பிசகாதவாறு பலிக்களம் என்னும் பெயருள் இரண்டரை மணி நேரத்துக்குள் அனுபவ ரீதியாகச் செய்து முடித்துள்ளார் கலைமணி நீ. சவிரிமுத்து அடிகள்.

கதை வசனமும் நாடகம் பார்ப்பவர்களின் மனதில் எவ்வித உணர்ச்சியை ஏற்படுத்த வேண்டு மென்று கலைமணி சவிரிமுத்து அவர்கள் கருதி எழுதினாரோ, அந்த உணர்ச்சி சிறிதளவும் குன்றாது திறம்பட ஒவ்வொரு நடிகர்களும் நடித்துள்ளார்கள் கிறிஸ்துவின் காலத்துக்கு எம்மை அழைத்துச் சென்று, வரலாற்று நாயக நாயகிகளுடன், அவர்களுடைய உணர்ச்சியுடன், பார்வையாளர்களையும் ஒன்றாகப் பிணைத்து விடுகிறார்கள் பழுதடைந்து செல்லும் உலகப்போக்கினை இந்நாடகம் மனமாற்றம் காண உதவச்செய்யுமென நம்ப இடம் உண்டு. பலிக்களம் நாடகத்தில் சிறப்பற்ற அம்சம் ஏதாவது இருக்குமெனத் துருவி ஆராய்ந்தால் கூட ஏமாற்றம் தவிர வேறு இல்லை. சமயம் என்ற மாறுபாடன உணர்வோடு பார்த்தால் கூட, கதை, வசனம், நடிப்பு ஆகியவற்றில் இகழ்ச்சியோ, தன்மானக்குறைவோ, ஆபாசமோ, அறிவுக்குப் பொருத்தமற்றதாகவே ஒன்றும் இல்லை, ஒலி, ஒளி, இசை, பாடல் ஆகியவை கூட குறைகூறும் படியாக இல்லை. மாறாக இவைகளே நாடகத்துக்கு உயிரூட்டம் கொடுக்கின்றதென்றே கூறலாம். உதாரணத்துக்கு "ஓசானா"

இலைகள் மூலம் ஒரு வாராற்றுச் சம்பவத்தை வெளிப்பாடாக்கும் உத்திமுறையினைக் கூறலாம். அக்காலத்தில் யூத சமூகத்தாரிடையே குடிகொண்டுலவிய ராஜ தந்திரங்கள், பதவி மோகம், மடாதிபதிகளின் ஆக்கிரமிப்பு, பொறாமை, நீதிமுறை, பணஆசை, பொய்க் கூற்று, காட்டிக் கொடுத்தல், இம்சை செய்தல், கலைநுட்பம், வாக்கு மூலம் போன்றவற்றோடு மற்றும் அவர்களுடைய நடை உடைகள் அனைத்தும் அற்புதமாகக் கையாளப்பட்டுள்ளன. பொதுவான உலக மக்களும் இப் பாவக் காரியங்களோடு தொடர்புடையவர்கள் என்பதை நுணுகிய கோணத்தில் வெளிப்படையாக்கியுள்ளார் கலைமணி அவர்கள்.

உயர்ந்த விசயங்களை உயர்ந்த கருத்துடன் பார்க்க வேண்டுமென்பது சிறந்த மனப்பான்மை. இந்தமனப்பான்மையுடன் இன மத வேறுபாடின்றி இந்நாடகத்தைப் பாக்கும் போதுதான் பலிக்களத்தின் கதை, வசனம், நடிப்பு நாடகஉத்தி ஆகியவற்றின் முழு உயர்வையும் கான முடிகிறது. பலிக்களம் நாடகம் வளர்ந்து வரும் வரலாற்று நாடகங்களில் ஒரு மைல் கல்.

**பொன் . பொன்ராசா.**
**வீரகேசரி, செவ்வாய்க்கிழமை**

# கொழும்பில் பலிக்களம்

யாழ் திருமறைக்கலாமன்றத்தினரின் பலிக்களம் என்னும் பாஸ்கா நாடகம் 23.3.73 வெள்ளியன்று புனித பீற்றர்ஸ் கல்லூரியில் நடைபெற்றது. கொழும்பு வாழ் தமிழ் மக்கள் – சிறப்பாகக் கிறீஸ்தவ மக்கள் கொடுத்து வைத்தவர்கள் தரம் குறைந்த தகுதியற்ற நாடகங்களையே அடிக்கடி பார்க்கும் மக்கள் பலிக்களத்தைப் பார்த்திருப்பார்களானால் உண்மையிலேயே பெருமகிழ்வு கொண்டிருப்பார்கள். கலையரசு க. சொர்ணலிங்கம், இதன் தயாரிப்பாளரான அருட் திரு நீ. மரியசேவியர் அவர்களைப்பற்றிக் கூறிய பின்வரும் கூற்று உண்மையானது; வெர்றும் புகழ்ச்சியல்ல என எண்ணிருப்பார்.

"சமய விஷயங்களைக்காட்டுவது மாத்திரமன்றி நாடகக்கலையை விருத்தி செய்வதில் அடிகளார் ஆற்றி வரும் தொண்டு மிகவும் பாராட்டத்தக்கது. இவர் போன்றவர்களில் ஆர்வத்தாலும், ஆற்றலாலும் தமிழ் நாடகக்லை உன்னத நிலையை அடையுமென எதிர் பார்த்து வருகின்றேன்". விரைவில் இந்நாடகம் தமிழ் நாட்டிற்குக்குச் செல்லப்போவதாக அறிந்தேன். தமிழ் நாட்டில் கல்வி பயின்ற பொழுது பாண்டிச்சேரியில், நவாப் ராயமாணிக்கம் அவர்களின் நாடகத்தை நானும் சங்கீத பூசணம் போல் திலகநாயகமும் பார்வையிடும் சந்தர்ப்பம் கிடைத்தது. பல்வேறு நாடக உத்திகளையும், நுணுக்கங்களையும் கையாண்டு திறம்பட உருவாக்கப்பட்ட இந் நாடகத்தைப் பார்வையிட்ட பார்வையாளர்களில் சிலர், மண்டபத்தினுள்ளேயே மயங்கி வீழ்ந்தனர். எனவே தமிழ் நாடு செல்லும் பலிக்களம், தன்னிடம் உள்ள சிறு சிறு தவறுகளையும், குறைகளையும் நிவர்த்தி செய்தல் வேண்டும். உதாரணமாக பின்னணி பாடியவரின் குரல் பல இடங்களில் உச்சஸ்தாயில் ஒலித்தபடியால் பாடல்களை இரசிக்க முடியவில்லை. பிலாத்துவாகத் தோன்றியவரின் தோற்றம் சரியாக இருந்தாலும், பல இடங்களில் குரல் எடுபடவில்லை. இத்தகைய சில சிறு தவறுகளைத் திருத்தி மேடையேற்றும் பொழுது பலிக்களம் பலரின் பாராட்டுதல்களைப் பெறும் என்பது எண்மை.

இத்தகைய நாடகங்களைத் திருமறைக்கலாமன்றத்தினர் தயாரித்து அளித்துத் தமிழ் கூறும் நல்லுலகிற்கும், கிறிஸ்தவ மறைக்கும் பெரும் புகழ் தேடித்தருவார்களாக. அல்லும் பகலம் அயராது உழைக்கும் நீ. மரியசேவியர் அடிகளார் பலரின் பாராட்டுதல்களைப் பெறுவார் என்பது அசைக்க முடியாத நம்பிக்கை.

**புலவர் அரியநாயகம்.**

## திருமறைக்கலாமன்றத்தினரின் பலிக்களம்!

### நவீன உத்திகள் கொண்ட பத்தி இரசம் ததும்பும் வெற்றி நாடகம்.

**ச**மீபகாலமாக யாழ் வீரசிங்கம் மண்டபத்தில் தமிழ் ரசிகர்கள் நாடகங்கள் பலவற்றைப் பார்த்து ரசிக்கும் வாய்ப்பைப் பெற்று வருகிறார்கள். மிக அண்மையில் இங்கு மேடையேறிய மூன்று நாடகங்கள் குறிப்பிடத்தக்கவை.

புளுகர் பொன்னையா–சமூகக் குறைபாடுகளைப் பிட்டுக் காட்டும் ஓர் சீர்திருத்த நகைச்சுவை நாடகம். கொள்ளைக்காரன் – இந்தியாவில், ஒரு ஜமிந்தாரின் ஆட்சியில் இடம் பெற்ற கொடுமைகளையும், அதற்கு இலக்கான ஒரு கிராமத்தான் பழிவாங்கும் உணர்வுடன் கொள்ளைக்காரனாக மாறுவதையும் கருவூலமாகக் கொண்டு உருவாக்கப்பட்ட ஒரு கற்பனை நாடகம். பலிக்களமோ, கிறீஸ்துவதத்துவத்தின் அடிக்களமான மனிதகுமாரனின் திருப்பாடுகள் சிலவற்றை மையமாகக் கொண்ட பக்தி ரசம் சொட்டும் ஒரு சோககாவியம்!

புளுகர் பொன்னையாவுக்கும், கொள்ளைக்காரனுக்கும் செய்யப்பட்ட அளவு பலிக்களத்துக்கு விளம்பரம் இருந்ததாகத்தெரியவில்லை. இவ்வளவு சிறப்பான ஒரு நாடகத்தை மிக அடக்கமாக, ஆனால் வெற்றிகரமாக நடாத்திக்காட்டிய திருமறைக்கலாமன்றத்தினர் பாராட்டுக்குரியவர்களே. புளுகர் பொன்னையாவையும், கொள்ளைக்காரனையும் இந்தப் பலிக்களத்துடன் ஒப்புநோக்குவது எனது நோக்கமல்ல. எனவே பலிக்களத்தின் வெற்றிக்கு காரணமாக இருந்த சில அம்சங்களை மாத்திரம் இங்கு குறிப்பிட விரும்புகிறேன்.

"டாண்" என்று சரியாக 7 மணிக்கு நாடகம் ஆரம்பமாயிற்று. அதேபோல சரியாக 9 மணிக்கு முடிவுற்றது. முக்கிய பிரமுகர்கள் வந்து சேரும் வரைக்கும் காத்திராமல், குறித்த நேரத்தில் நாடகத்தை ஆரம்பிப்பது ஒரு சாதனை மட்டுமல்ல, துணிச்சலான காரியமும் கூட.

இயேசு நாதர் சிலுவையினைச் சுமந்து செல்லும் காட்சியுடன் நாடகம் ஆரம்பமாகிறது. நடிகர்கள் அனைவருமே சிலை போல் நிற்க கதையின் போக்கை பின்னணியில் சொல்லும் உத்தி சிறப்பானது. கைதேர்ந்த ஓவியனின்

கரம் பட்ட ஓவியம் போல் அக் காட்சி மனதில் பதிவதாய் அமைந்தது. இம் மாதிரி பல கட்டங்களில் நடிகர்கள் நீட்டிய கைகளுடனும், திறந்த வாய்களுடனும், ஆடாமல் அசையாமல் நிற்பதும், பின்னணிக்குரலில் கதை விளக்கமளித்து நாடகத்தை ஓட்டுவதும் நம் நாடகங்களில் புதிய உத்தி என்றே சொல்லலாம். சிறப்பாக, இம் மாதிரி புராதனக்கதை அம்சம் கொண்ட நாடகங்களுக்கு இது பெரிதும் உதவக்கூடும். முழுக்க முழுக்க சோகமும், பக்தியும் நிறைந்த ஒரு நாடகத்தை அலுப்பு சலிப்பு இல்லாமல் ரசித்துப் பார்த்த நிறைவோடு ரசிகர்கள் திரும்பவேண்டும் என்பதில் இந்த நாடகத்தின் இயக்குநர் மிகவும் கவனமாக இருந்துள்ளார். வலிந்து புகுத்தப்படும் நகைச்சுவையோ, பெண்பாத்திரச் செருகலோ இன்றி பக்தி ரசம் குறையாமல் தயாரிப்பதில் அவர் வெற்றி பெற்றுள்ளார் என்றே சொல்லவேண்டும். முக்கியமாகக் காட்சி அமைப்புகளுக்கான இடைவேளையினாலோ, திரை இறங்கி ஏறுவதனால் ஏற்படும் தாமதத்தினாலோ கதையின் தொடர்ச்சி அறுந்து போகாமலும், ரசிகர்களுக்கு பத்தி உணர்ச்சி சிதைந்து போகாமலும் இருக்க வேண்டும் என்பதில் இயக்குநர் காட்டியுள்ள அக்கறை பிரமிப்புக் குரியது. நாடகக் கலையின் நவீன நுட்பமுறைகள் பலவற்றையும் இதில் காணமுடிந்தது.

ரசிகர்கள் மத்தியில் இருந்து கதாபாத்திரங்கள் மேடைக்கு ஓடிச் செல்வதும், நிழலைக்கொண்டும் காட்சிகளைச் சித்தரித்துக் காட்டுவதும், மேகங்கள் அசைவது போன்றவற்றை திரையில் காட்டி, நாடகத்துடன் தொடர்பு படுத்துவதும், டிராமாஸ்கோப் என்று சிலர் கருதி வருகின்றார்கள். ஆனால் பலிக்களத்தைப் பார்த்தவர்கள் இந்தக்கருத்தை மாற்றி கொள்வார்கள் என்றே நான் கருதுகின்றேன். புராதன கதை அம்சம் கொண்ட சிறந்ததொரு மேன்நாட்டு சினிமாஸ்கோப் படம் ஒன்றைப் பார்ப்பதைப் போன்ற பிரமையையே இந்த நாடகத்தின் பல கட்டங்கள் ஏற்படுத்துவனவாய் அமைந்ததென்றால் மிகையல்ல. மேடைக்காட்சி அமைப்புகளைப் பற்றியும், பின்னணி இசை போன்றவற்றையும், குறிப்பிட்டுச் சொல்லவேண்டியதில்லை. இந் நாடகத்தின் வெற்றிக்கு இவையும் முக்கிய அம்சங்களாக அமைகின்றன. எந்தக்கட்டத்தில் எந்த நடிகர் சிறப்பாக செய்தார் என்று சொல்வது சிரமம். எல்லாக்கட்டங்களிலும் எல்லோரும் சிறப்பாக செய்தனர் என்பதே பொருந்தும். மற்றவரை விட நான் சிறப்பாக நடித்துப் புகழ் பெறவேண்டும் என்ற போட்டி மனப்பான்மை பல நாடகங்களில் மேடையிலே பகிரங்கமாகி விடுவதை நாம் பார்த்திருக்கின்றோம். நம் நாடகங்கள் தோல்வியுறுவதற்று இதுவும் ஒரு காரணம். ஆனால் பலிக்களத்தில் நாடகத்தின் வெற்றியையே நடிகர்கள் மாத்திரமன்றி, அதில் சம்பந்தப்பட்ட

அனைவருமே கருத்தில் கொண்டிருந்தனர் என்பது வெளிப்படை. நாடகம் முடிவில் நடிகர் அறிமுகம் இடம் பெறவில்லை. நாடகம் பற்றிய மலரில் எந்த நடிகர் எந்தப் பாத்திரத்தில் நடித்தார் என்ற விபரமோ தரப்பட்டிருக்கவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது.

வசனங்களை இயற்கையாகப்பேசி இயல்பாக நடிகர்கள் நடிப்பதைப் பார்த்த போது, இதற்காக எவ்வளவு பயிற்சி பெற்றிருக்க வேண்டுமென்று நினைக்கத் தோன்றியது. தனிப்பட்ட முறையில் யூதாஸ் பாத்திரத்தில் வந்தவரதும், தலைமைச் சீடனாக வந்தவரதும் நடிப்பு என்னை மிகவும் கவர்ந்தது என்பேன். இயேசுநாதரின் ஆவி பிரியும் கட்டத்தில் மின்னல் வெட்டி, இடிமுழங்கி, இயற்கை கொந்தளிப்பதாக காட்ட முயற்சி செய்துள்ளனர். அதிலும் அவர்களுக்கு வெற்றிதான்.

சிறப்பம்சம் இன்னும் உண்டு. எழுதின் நீண்டு விடும். குறைகள் என்று சொல்வதானால் பின்வருவனவற்றைக் குறிப்பிடுவேன். ஒலிபெருக்கி சிலவேளைகளில் மக்கர் செய்து வசனங்களைத் தெளிவில்லாமல் செய்தது.

தேசாதிபதி பிலாத்துவின் மாளிகை முன்பக்கமாக அசைந்த போது குப்புற விழுந்து விடுமோ என்ற அச்சத்தைத் தோற்றுவித்தது. உயிர்பெற்றபின் தேவகுமாரன் மேகத்தினின்றும், இறங்கிவரும் கட்டத்தில் ஏணி அப்படியே ரசிகர்களுக்குத் தெரியும்படியாய் இருந்தது. இவைகளைத் தவிர்த்திருக்க முடியும்.

புராதன கதைகளையும், சரித்திர நாடகங்களையும், நாடகங்களாக மேடையேற்ற விரும்புகிறவர்கள் இந்நாடகத்தில் கையாளப்பட்டுள்ள நவீன முறைகளையும், உத்திகளையும், கூர்ந்து கவனித்தால் பயனுண்டு. மொத்தத்தில் பலிக்களம் நவீன உத்திகள் கொண்ட சிறந்தொரு பக்திரசம் ததும்பம் தமிழ் நாடகம். இதனைத்தயாரித்தளித்த திருமறைக் கலாமன்றத்தினருக்கு பல தடவைகள் சபாஷ் போடலாம். குறிப்பாக இயக்குநர்
அருள் திரு. நீ. மரியசேவியர் (சவிரிமுத்து) அடிகளாரும், தயாரிப்பாளர் அருள் திரு. ரி. இ. ராஜன் அடிகளும் பாராட்டிற்குரியவர்கள்

**ஈழநாடு - வாரமலர் ஞாயிற்றுக்கிழமை** **"பன்னீரன்"**

முதல் பதிப்பு: 1973~3~1
இரண்டாம் பதிப்பு: 1993~2~19
மூன்றாம் பதிப்பு: 1996~3~30

பதிப்புரிமை: திருமறைக்கலாமன்றம்
அட்டைப்படம்: லோகன்
வெளியீடு: Canada Centre For Performing Arts
2175 Victoria Park Ave, #201
Scarborough, Ontario
M1R 1V6
Canada

Layout & Print by Lucky Print (416)261-2348

Published by:

THIRUMARAI KALAMANRAM
CANADA

SALE
2 00